பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

துரித தபால்,பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

விலை ரூபா. 6.00

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை 21 | ஞாயிற்றுக்கிழமை | (07.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 353

# சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்கு

# ஜனாதிபதியுடனான இணக்கப்பாடு உதவும்

## புத்தளத்தில் பிரதமர் உரை

(புத்தளம்)

**தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு கண்டு, சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதற்கு தற்போது ஜனாதிபதியுடன் ஏற்பட்டுவரும் இணக்கப்பாடு அரசாங்கத்தின் கையைப் பலப்படுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புத்தளத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.**



புத்தளம் மாவட்டத்திற்கு நேற்று விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்குள்ள முஸ்லிம் மக்களின் குறைநிறைகளை கேட்டு அறிந்து கொண்டார்.

மக்களின் குறைகளை கேட்டறிந்து கொண்ட அவர் அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை பேச்சு வார்த்தைகள் மூலம் சுமுகமான நிலைக்கு கொண்டு வர முடியும். இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஜனாதிபதியுடன் இணைந்து அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

நெருக்கடி நிலைக்கான தீர்வுக்கு பேச்சு வார்த்தையே சிறந்த மார்க்கம் என்று அரசாங்கம் கருதியதினாலேயே ஜனாதிபதி அமைச்சுப் பொறுப்புக்களைப் பறித்த போது வீதியில் இறங்கிப் போராட்டங்களை நடத்தாமல் தவிர்த்துள்ளோம். இலங்கையின் பாரம்பரியத்திற்கு மாறாக உண்மையாக நாம் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தியிருந்தால் அதனால் பாதிப்படைவது மக்கள் தான் என்பதை கருத்தில் கொண்டே அமைதியான முறையில் நடந்து கொண்டோம்.

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக சமாதான நடவடிக்கைகளில் தொய்வு

(10ம்பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - பிரதமர் இணக்கப்பாடு டிசம்பர் 15க்குள் ஏற்பாடாகிவிடும்

### கோலாலம்பூரில் அமைச்சர் தெரிவிப்பு

(கோலாலம்பூர்)

தென்னிலங்கை அரசியலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும், பிரதமர் ரணில் விக்ரமசிங்காவிற்கும் இடையில் நிலவும் கருத்து முரண்பாடுகள் இம்மாதம் 15 ஆம் திகதிக்குள் தீர்த்துவைக்கபடுமென அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கோலாலம்பூரில் தெரிவித்துள்ளார்.

மலேசியா சென்றிருந்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கோலாலம்பூரில் மலேசிய வழக்கறிஞர் சங்கக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான கருத்து முரண்பாட்டுக்குள்ளான விடயங்கள் தொடாபாக பயனுள்ள பேச்சுவார்ததைகள் நடைபெற்றுவருகிறது.

இப்பேச்சுவார்த்தைகளின் போது இருவருக்குமிடையே திருப்திகரமான முடிவுகள் எட்டப்படும் என்று நம்பிக்கை தெரிவித்த பீரிஸ் ஜனாதிபதியும், பிரதமரும் இணக்கப்பாட்டுக்கு வருவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகிறார்கள் என்றும் தெரிவித்தார். (ம)

## எனது அனுமதியின்றி கட்சியின் கூட்டத்தைக் கூட்ட வேண்டாம்

### சம்பந்தனுக்கு சங்கரி கடிதம்

(கொழும்பு)

கட்சித் தலைவருடன் கலந்தாலோசனை செய்யாது தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுவைக் கூட்டுவது அமைப்பு விதிகளுக்கு விரோதமான இத்தகைய செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி. செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கே...டுள்ளார்.

அக் கடிதத்தில் ஆனந்தசங்கரி மேலும் தெரிவித்திருப்பதாவது;

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுவின் கூட்டம் ஒன்றைக் கூட்டுவதாயின் அது குறித்துத் தலைவர் என்ற ரீதியில் என்னுடன் கலந்தாலோசிக் வேண்டும்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 14ம் திகதி அம்பாறை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் மத்திய குழுவின் கூட்டம்

(10ம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சை இன்று

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை இன்று நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு தமிழ் மொழி மூலம் 68 ஆயிரத்து 441 பரீட்சார்த்திகளும் சிங்கள மொழி மூலம் 2லட்சத்து 40 ஆயிரத்து 493 பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சைக்கென 463 இணைப்பு நிலையங்களும், 2ஆயிரத்து 568 பரீட்சை நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(உ-61,10)

## மூதூரில் துப்பாக்கிச் சூடு லான்ஸ் கோப்ரல் காயம்

(திருகோணமலை)

மூதூர் 57 ம் மைல் பகுதியில் பொலிஸ் இராணுவ கூட்டுச் சோதனை நிலையத்தில் கடமையாற்றும் லான்ஸ் கோப்ரல் ஒருவர் இனந்தெரியாதோர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

தமிழ்-முஸ்லிம் கிராமங்களின் எல்லைப்புறமான நாராயணபுரத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடமையை முடித்துவிட்டு சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளையில்,

இனந்தெரியாத மூன்றுபேர் தன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் துப்பாக்கி நபர்கள் சாரம் அணிந்திருந்ததாகவும் பிரஸ்தாப நபர் தெரிவித்தார். (ந)

அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் [illegible]
கே[illegible]டுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பியில் இருந்து தப்பி புலிகளிடம் சரணடைந்தேன்

## செய்தியாளர்களிடம் ஈ.பி.டி.பி உறுப்பினர் விபரிப்பு

(கிளிநொச்சி)

ஈ.பி.டி.பி அமைப்பிலிருந்து தப்பிச் சென்று விடுதலைப் புலிகளிடம் தாம் சரணடைந்ததாக கிளிநொச்சி கரடிப்போக்கை சொந்த இடமாகக் கொண்ட ஐயமபிள்ளை யோகராஜா (வயது33) என்பவர் தெரிவித்தார்

விடுதலைப் புலிகளிடம் தாம் சரணடைந்தமை குறித்து விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி ஊடகத்துறைப் பணியகத்தில் நேற்று பத்திரிகையாளர்களுக்கு விபரித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில் 1988ம் ஆண்டு கட்டாய ஆட்சேர்ப்பின் மூலம் இவ் அமைப்பில் நான் இணைத்துக் கொள்ளப்பட்டேன். பின்னர் இந்தியாவுக்கு கொண்டு செல்லப்பட்டேன் அங்கு 500க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு பயிற்சி அளிககப்பட்டு வருகிறது. அங்கு நான் இருந்த நேரத்தில் யாழ்ப்பாணத்தில் நல்ல வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதாகக் கூறி படகுமூலம் மன்னாருக்கு நான் அழைத்து வரப்பட்டேன்.

பின்னர் அங்கிருந்து பஸ் மூலம் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டேன். அங்கு ஈ.பி.டி.பி கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது இல்லத்தில் சந்தித்தேன்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் தினமுரசுப் பத்திரிகை விற்பனை செய்யுமாறும், மாதம் 5ஆயிரம் ரூபா வேதனம் தருவதாகவும் அவர் கூறினார். இதன்படி யாழ்ப்பாணத்திற்கு இராணுவ விமானம் மூலம் அழைத்துவரப்பட்ட நான் [illegible]ன்று மாதங்களாக யாழ்.நகரில[illegible] [illegible]ள்ளி ஸ்ரீதர் தியேட்டரில் வெளியில் செல்லாதவாறு தடுத்து வைக்கப்பட்டேன்.

(10ம் பக்கம் பார்க்க)

# எமது கட்சி உறுப்பினரை புலிகள் கடத்தியுள்ளனர்

## ஈ.பி.டி.பி அறிக்கை

(கொழும்பு)

எமதுகட்சி உறுப்பினரான விமல் என அழைக்கப்படும் ஐயம்பிள்ளை யோகராஜா என்பவர் விடுதலைப் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்பது இப்போது அம்பலமாகியுள்ளது.

இவ்வாறு ஈ.பி.டி.பி விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் தான் சரணடைந்ததாக ஈ.பி.டி.பியைச் சேர்ந்த யோகராசா என்பவர் புலிகளின் பாதுகாப்பில் இருந்தவாறு கிளிநொச்சியில் வைத்து நேற்றைய தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததை அடுத்து, ஈ.பி.டி.பி விடுத்த செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: கடந்த நவ.10ம் திகதி

(10ம் பக்கம் பார்க்க)





விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கல்வி நிலையைக் கட்டி எழுப்புவதில் தேசியத் தலைவர் கரிசனை காட்டி வருகிறார்

## வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர்

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கல்வி நிலையில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளைச் சரிசெய்து நல்லதோர் கல்விச் சமூகத்தைக் கட்டி வளர்ப்பதற்கு எமது தேசியத் தலைவர் மிகவும் பிரயத்தனப்பட்டுவருகிறார்.

வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் இ.தாயகன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடமராட்சி உபயகதிர்காமப் பகுதியில் நேற்றையதினம் இடம்பெற்ற பொதுமக்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தாயகன் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கல்விநிலை கடந்த 1995 ஆம் ஆண்டுகாலப் பகுதிக்குப் பின்னர் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்.குடாநாட்டை விட்டு வெளியேறிய பின்னர் படையினர் யாழ்.குடாநாட்டை ஆக்கிரமித்திருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில், யாழ்.குடாநாட்டு மாணவர்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள விரக்திநிலை மற்றும் பய உணர்வு ஆகியவற்றால் உளரீதியாக பாதிக்கப்பட்டமையும் இக் கல்விநிலை வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக இருப்பதுடன், வேறு பல புறக் காரணங்களும் யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைய காரணமாகவும் இருக்கலாம்.

எனவே யாழ்.குடாநாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள கல்விநிலையை வளர்த்து மேம்படுத்தும் நோக்கிலேயே எமது தலைவர் எம்மை இங்கு அனுப்பி வைத்துள்ளார். இதன் ஒரு கட்டமாக தற்போது வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு போசாக்குச் சத்துணவு வழங்கி கல்வித்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடமராட்சி கிழக்குப பகுதியிலுள்ள தரம் 9 இற்குக் கீழ் கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும் உலக உணவுத் திட்டத்தின் கீழ் தொண்டு நிறுவனம் ஒன்றின் நிதி அனுசரணையுடன் போசாக்குச் சத்துணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இவ்விலவச போசாக்கு உணவு வழங்கும்நடைமுறை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-43)



மக்கள் வங்கியின் பிரதான கிளையில் சனிக்கிழமை தோறும் கருமம் ஆற்றும் நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட போது பிரதிப் பொதுமுகாமையாளர் பி.வி.பத்திரன மங்கள விளக்கேற்றுவதையும், உதவிப் பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராஜா, வங்கிமுகாமையாளர் எஸ்.சிவபாலன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# வான்தோண்டும் பணியில் படையினர் இணைந்திருப்பது உள் நோக்கம் கொண்டது

## வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசம் கண்டனம்

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பகுதியில் வான் தோண்டுவதற்கு ஏற்ற காலநிலை இல்லாத சூழ்நிலையில் தற்போது அப் பகுதிகளில் வான் தோண்டுவதற்கு படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளதை வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

வான் தோண்டுவதற்குத தற்போது படைத்தரப்பு வழங்கியுள்ள அனுமதி தொடர்பாக வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசம் கருத்து வெளியிடுகையில்;

வடமராட்சிப் பகுதியில் வான் தோண்டுவதற்கு கடந்த காலங்களில் பல தடவைகள் படைத்தரப்பினரிடம் அனுமதியைக் கோரியிருந்த போதிலும், இதற்கான அனுமதி எதனையும் படைத்தரப்பு வழங்கவில்லை.

மாரிகாலமாகிய தற்போது, மேற்படி பகுதியில் உள்ள இன்பருட்டி, சுப்பர்மடம் மற்றும் சக்கோட்டை ஆகிய இடங்களில் வான் தோண்டுவதற்கான அனுமதியை நேற்று முன்தினம் இராணுவத்தின் 524வது படையணித் தலைமையகம் வழங்கியுள்ளது.

இந்த அனுமதியால் எந்தவித பயனும் இல்லை. தற்போதைய காலநிலையில், கடற்கரையில் பள்ளங்களைத் தோண்டுவதற்கோ அன்றி கற்பாளங்களை வெளியே எடுப்பதற்கோ மீனவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போதைய காலநிலையில் கடும் காற்றுடன் கூடிய மழையினால் கடற்கரையில் பெரும் அலைகள் எழுந்து மோதுகின்றன. இந்நிலையில் வான்தோண்டும் பணியினை எவ்வாறு மேற்கொள்ள முடியும்? இதனால் வான் தோண்டும் பணியில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் சுப்பர்மடம் மற்றும் இன்பருட்டி பகுதிகளில் வான் தோண்டும் பணியில் மீனவர்களுடன் இணைந்து படையினரும் ஈடுபட்டு வருகின்றனர். மீனவர்கள் அப் பகுதியில் சுயாதீனமாகச் செயற்பட முடியாத வகையிலேயே படையினரும் அவர்களுடன் இணைந்து அப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். படையினர் தமது சுய இலாபம் கருதியே இவ்வாறான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளனர். (உ-43)





யாழ். மாவட்ட விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் இன்று மாலை 3.00மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டியின் இரண்டாவது கால்இறுதிப் போட்டியில் மோதவுள்ள நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தின் வீரர்களையும், சென்றோக்ஸ் விளையாட்டுக் கழக வீரர்களையும் படங்களில் காணலாம்.

# உள்ளூராட்சி மன்ற உயர்பதவி வெற்றிடங்களை நிரப்ப அங்கீகாரம்

(கொழும்பு)

மாகாண சபைகளின் கீழ் இயங்கும் உள்ளூராட்சி மன்றங்களில் நிலவும் உயர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அவர்களுக்குரிய வசதிகளை செய்து கொடுப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களில் பொறுப்புணர்வுடன் செயற்படக் கூடிய உயர் பதவிகளில் நீண்ட காலமாக வெற்றிடங்கள் நிலவி வருகின்றன.

இவ்வாறான உயர் பதவிகளில் தகுதியானவர்களை நியமிக்க வேண்டுமென அமைச்சரவையின் கவனத்திற்கு தெரியப்படுத்தியதையடுத்து, தற்போது 598 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது என உள்நாட்டு அலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சித்துறை அமைச்சர் அலுக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த 2001 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னரே நாட்டின் பொருளாதாரத் துறை வளர்ச்சி கண்டுள்ளது.

இவ்வாறான வளர்ச்சிகளை மேலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு அனைத்து அரச நிறுவனங்களும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். இந்த வகையில் இவ்வாறான நிறுவனங்களில் உள்ள பொறுபபான பதவிகளில் நிலவும் பல வெற்றிடங்கள் தகுதி உடையவர்களால் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படவுள்ளன.

மேலும், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் போக்குவரத்து வசதிகள் கருதி அவர்களுக்கு வாகனங்கள் வழங்குவதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் தற்போது பெறப்பட்டுள்ளது. எனவே இதன்மூலம் வட-கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் மேற்படி தரப்பினருக்கு விரைவில் வாகனங்கள் வழங்கப்படும்.

அத்துடன், கிராம அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் மோட்டார் சைக்கிள், பிரயாணப் பை ஆகியன வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு பதவியுயர்வு மற்றும் வெளிநாட்டுப் புலமைப்பரிசில் ஆகியனவும் வழங்கப்படுமென அலுக் அலுவிகார மேலும் தெரிவித்துள்ளார். (உ-18)

# யாழில் தபால் பயிற்சி பாடசாலை

(கொழும்பு)

தபால் அதிபர்களுக்குப் பயிற்சி வழங்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் தபால் பயிற்சிப் பாடசாலை ஒன்று நிறுவப்படவுள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அகில இலங்கை தபால் தொலைத்தொடர்பு ஊழியர் தொழிற்சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் தபால் பயிற்சிப் பாடசாலை ஒன்று இல்லாததால், மாவட்ட அஞ்சலதிபர்கள் பயிற்சி பெறுவதில் எதிர் நோக்கி வந்த சிரமங்கள் குறித்து, யாழ் மாவட்ட தபால் தொலைத்தொடர்பு ஊழியர்கள் சங்கம் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சுட்டிக்காட்டியதை தொடர்ந்தே யாழ்ப்பாணத்தில் மேற்படி பயிற்சிப் பாடசாலை நிறுவப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

வாழ்த்துகின்றோம்
இன்று நடைபெறும் 5ம் தர புலமைபரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சித்திபெற
எமது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
கல்விப் பிரிவு
வலம்புரி

# அழகியல் விருத்திக்கு அரசாங்க அனுசரணையுடன் புதிய சமுதாயம்

## உருவாக்கப்படும் என கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் அழகியல் கலைகளை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தின் அனுசரணையுடன் புதியதொரு சமுதாயம் உருவாக்கப்படுமென கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவிததுள்ளார்.

கலைஞர்கள் தினத்தைக் குறிக்கும் முகமாக கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், எமது நாட்டின் பாரம்பரிய கலாசாரத்தையும் பண்புகளையும் பாதுகாக்கும் பொறுப்பு கலைஞர்களிடமே இருக்கிறது. ஒரு நாட்டின் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்டும் ஆற்றல் கலைஞர்களுக்கு இருப்பதால் அவர்களைப் பாராட்டும் பொறுப்பு எமக்கு இருக்கிறது.

எனவே தான் எமது நாட்டில் ஆற்றல் மிக்க இளைஞர்களை உருவாக்கி கலைகலாசாரத்தை வளர்ப்பதற்கு அரசாங்கத்தின் அனுசரணையுடன் பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (உ-60,10)

# ஆணைக்குழு அறிக்கை ஜனாதிபதி சந்திரிகா வசம்

(கொழும்பு)

அத்துருகிரியவில் உள்ள இராணுவ,பாதுகாப்பு நிலையம் சம்பந்தமான தகவல்கள் வெளியே கசிந்துள்ளமை குறித்தும், அங்கு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அதன் அறிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் நேற்று முன்தினம் கையளித்துள்ளது.

மேற்படி இராணுவ முகாமில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அங்குள்ள இராணுவ அதிகாரிகளை கைது செய்யுமாறும் யாராவது அழுத்தம் கொடுத்தார்களா? என்பது குறித்தும் இக்குழு ஆராய்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவிற்கு ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தர்மசிறி ஜயவிக்கிரமசிங்க தலைமை தாங்கியுள்ளார். (உ-60.10)

# பாகிஸ்தான் செல்லும் இலங்கையர் பொலிஸில் பதியத்தேவையில்லை

(கொழும்பு)

பாகிஸ்தான் செல்லும் இலங்கைப் பிரஜைகள் பொலிஸில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற நடைமுறை நீக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் கடந்த ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது, இலங்கைப் பிரஜைகள் பாகிஸ்தான் செல்லும் போது, பொலிஸில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற விதி முறையைத் தளர்த்துமாறு கேட்கப்பட்டிருந்தது.

அதையடுத்தே இந்த முடிவை பாகிஸ்தான் தற்போது எடுத்துள்ளது. (உ)

## பொதுநலவாய நாடுகளின் செயலாளராக கதிர்காமரா?

# கூட்டமைப்பு ஆட்சேபம்; அதிருப்தி தெரிவித்து

# பொதுநலவாய நாடுகள் சபைக்கு அறிக்கை

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் பதவிக்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் இந்நாள் ஜனாதிபதியின் ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் போட்டியிடுவதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,இது தொடர்பில் தமது அதிருப்தியை வெளியிடும் வகையில் பொதுநலவாய நாடுகள் சபைக்கு அறிக்கை ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரெலோ இயக்கத்தலைவர் செல்வம் அடைக்கலநாதன்,ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள அந்த அறிக்கையில்,

பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் செயலாளர் பதவிக்கு இலங்கையர் ஒருவர் போட்டியிடுவதை இலங்கை மக்கள் வரவேற்கத்தான் வேண்டும்.

சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து உள்நாட்டுப் பிரச்சினையால் அழிந்து கொண்டிருக்கும் இலங்கை கடந்த இரு தசாப்த காலமாக பிரச்சினையின் தீவிரக் கட்டத்தை அடைந்து நிற்கின்றது. இக்கால கட்டத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேலான மக்கள் கொல்லப்பட்டும், ஏராளமான அழிவுகளும், நாசங்களும் இடம்பெற்றும் இருக்கின்றன.

பிரதானமாக தமிழ் மக்களே இந்த அழிவை எதிர் கொண்டவர்களாவர்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் என்னும் பதவியைக் கொண்டிருக்கும் ஒருவர் மக்களிடையேயும் நாடுகளிடையேயும் நல்லெண்ணத்தையும் அமைதியையும் ஏற்படுத்தும் ஒருவராக இருக்க வேண்டும். அத்துடன் அவர் முரண்பட்டிருக்கும் பிரிவுகளுக்கிடையே சமரசத்தை ஊக்குவிப்பும் ஆற்றல் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் பொதுநலவாய அமைப்பின் செயலாளராக வருவதற்கு பெருவிருப்புக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினையில் கதிர்காமரின் பங்கு தொடர்பாக வெளிப்படையாகப் பரிசோதித்துப் பாக்கும் போது அவர் தனது உத்தியோகபூர்வ தொடர்பாடல்களில் பக்கச் சார்பற்ற முறையில் நடந்து கொள்ளவிலலை என்பது காணக்கிடக்கின்றது. இதற்கு சான்றாக கீழ்வரும் இரு சம்பவங்களையும் நாம் நோக்கலாம்.

★ அரச படைகளால் நவாலி தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சு,

★ அரச படைகளால் நாகர் கோவில் பாடசலையில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சு.

இவ்விரு சம்பவங்களின் விளைவாக பல நூற்றுக்கணக்கான தமிழ்க் குடிமக்கள், சிறுவர்கள் பலியாகினர்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் சார்பில் லக்ஷ்மன் கதிர்காமரால் விடுவிக்கப்பட்ட அறிகையானது முரணாகவே அமைந்திருந்தது.

வெளிப்படையாகவே மனித உரிமைகள் மீறப்பட்ட இச் சம்பவங்கள் தொடர்பாக கதிர்காமர் விடுத்திருந்த பிழையான அறிக்கையானது நடு நிலைமை, உண்மைத் தன்மை தொடர்பில் அவரின் கொள்ளளவிற்கு ஒரு முக்கியமான குற்றச்சாட்டாக இருக்கின்றது.

சக்தி மிக்க ஒருவராய் அவர் அரசுடன் இருந்த போது இனப்பிரச்சினை தோன்றியதற்கான காரணங்களையும் சிறுபான்மை தமிழ் மககளின் நியாயமான அபிலாஷைகளையும் பற்றி நேர்மையுடன் பேசும தைரியம் இல்லாதவராக இருந்தார்.

இதனடிப்படையில் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தமது ஆர்வத்தை வெளிப்படுத்திய வேறுபலருடன் ஒப்பிடும் போது லக்ஷ்மன் கதிர்காமரின் வினைத்திறன் எதிரானதாகவே தெனபடுகிறது.

இந்தப் பின்னணியில் கதிர்காமர் பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் செயலாளராக வருவதற்கான நற்சான்றுகள் பெரும் கேள்விக்குள்ளாகின்றன. அத்துடன் சிறுபான்மை மக்கள் இது விடயத்தில் எதிர்மறையாகக் கருதுவதற்கும் தகுந்த காரணங்கள் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தால் வல்வையில்

# புற்றுநோய் ஆஸ்பத்திரி ஒன்றை அமைத்திருக்கலாம்

## சிவாஜிலிங்கம் எம்.பி. ஆதங்கம்

(பருத்தித்துறை)

'வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் வெளிநாட்டு உதவியுடன் அமையவிருந்த புற்றுநோய் சிகிச்சை நிலையம் எமக்குள்ளேயிருந்த ஒற்றுமையின்மையினால் இல்லாமல் போய்விட்டது. இதற்கு யாழ். மாவடடப் பாராளுமன்ற உறுப்பினர் சிலரும் காரணமாக இருந்தனர்.

மேற்கண்டவாறு யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஹொலிவூட் நடிகை அஞ்சலீனா ஜொலி வழங்கிய விசேட நிதியான 10 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட அதி நவீன சிறுவர் விடுதி மற்றும் குளிரூட்டப்பட்ட பிரசவ அறை புனரமைக்கப்பட்ட களஞ்சிய அறைகள் திறப்பு விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்தும் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்,

வல்வெட்டித்துறையில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை அமைக்க அப்போதைய யு.என்.எச்.சி.ஆர். யாழ். பிரதிநிதி திருமதி மொறிஸ் மோகான் 40 கோடி ரூபாவை வெளிநாட்டு உதவியாகப் பெற்றுத்தரவும், விடுதலைப் புலிகள் ஒருகோடி ரூபாவைத் தரவும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எம்மவர்கள் நிதியை வாரி வழங்கவும் முன்வந்தார்கள்.

இந்நிலையத்தை வல்வெட்டித்துறையில் அல்லாது தத்தம் இடங்களில் தான் அமைக்கவேண்டும் என விரும்பியவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் நாம் அதை இழந்தோம்.

புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் அமைப்பதற்காக் ஒன்றுகூடிய நிர்வாகசபை செயலிழந்து விட்டது. சுகாதார அமைச்சு புற்றுநோய்ச் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கியும், அது எமக்குக் கிடைக்காமல் போய்விட்டது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாகவும் தெல்லிப்பழை, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைகளை ஆதார வைத்தியசாலைகள் ஆகவும் தரம் உயர்த்துவதற்கு சுகாதார அமைச்சர் எனக்குச் சம்மதம் தெரிவித்திருக்கின்றார். வல்வெட்டித்துறை, ஊர்காவற்றுறை வைத்தியசாலைகள் தற்போதைக்குத் தரம் உயர்த்தப்படமாட்டாது எனவும் குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அங்கு உரையாற்றுகையில், யுத்த அனர்த்தங்களினால் யாழ். மாவட்டம் பேரழிவுகளுக்குட்பட்டுள்ளது. இம்மாவட்டத்தைப் புனரமைக்க சரியாகச் செயல்படக்கூடிய தலைமைத்துவப் பண்பு மிக்க துறைசார்ந்த புலமை கொண்டவர்களால் தான் முடியும்.

ஆனால், இப்பண்புகள் கொண்டவர்களுக்கு இன்று பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இவர்கள் யாழ். மாவட்டத்திற்கு மட்டுமல்ல வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதற்குமே தேவைப்படுகின்றார்கள். இப்பண்புகளில் ஒன்று கூட இல்லாதவர்களினால் எவ்வித பிரயோசனமும் இல்லை.

1992ஆம் ஆண்டு யுத்த காலத்திலே அப்போதைய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் டிவகலாலாவின் முயற்சியால் இவ் வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட சத்திர சிகிச்சைப் பிரிவு பாவிக்கப்படவில்லை. தற்போதைய மாவட்ட வைத்திய அதிகாரி பதவி ஏற்றது முதல் இவ் வைத்தியசாலை கட்டியெழுப்பப்பட்டு புதுப்பொலிவுடன் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

எமது தேசியத் தலைவரின் இடமான வல்வெட்டித்துறை யுத்த அனர்த்தங்களினால் பேரழிவுக்குட்பட்டுள்ளது. வல்வெட்டித்துறையில் பழைய நிலைமை இல்லாவிட்டாலும், தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய நிலை ஏற்படவேண்டும். அதற்காக இவ் வைத்தியசாலை சிறந்த சேவைகளை வழங்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

யு.என்.எச்.சி.ஆர். கொழும்பு தலைமையக இணைப்பதிகாரி நீல் றைட் உரையாற்றுகையில்,

கடந்த இரண்டு வருடங்களாக இப்பகுதி மக்களுடன் நான் கலந்துரையாடி வருகின்றேன். இம் மக்களின் பண்பு என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

நாம் சகல மக்களுடனும் சகோதரர்களாகவே வாழவிரும்புகிறோம். தேவைகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு அன்புக்கரம் நீட்டிச் சேவை செய்வதே எமது இலட்சியமாகும். எமது சேவைகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. வல்வெட்டித்துறை மக்கள் இடம்பெயர்ந்து தமது வீடுகளுக்குச் செல்ல முடியாது போனாலும், அவர்களுக்குச் சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு மாவட்ட வைத்திய அதிகாரி மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டப்படவேண்டியதாகும். இவர் ஒரு கனவுக் கதாநாயகனாகவே எம்முன் தோன்றுவதை நினைக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாகவே இருக்கின்றது எனக் குறிப்பிட்டார். (உ-52)

## வலி.மேற்கு பி.செ. பிரிவில் 50 வீடமைப்புத் திட்டம்

(பொன்னாலை)

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அராலி மேற்கு, அராலி மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வாழும் கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி வீடமைப்புத் திட்டங்களை அமுல்படுத்த கடற்றொழில் திணைக்களம் முன்வந்துள்ளது.

ஒவ்வொன்றும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இவ் வீட்டுத்திட்டங்களின் கீழ் அராலி மேற்கில் 40 வீடுகளும், அராலி மத்தியில் 10 வீடுகளுமாக மொத்தம் 50 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இவ்வீட்டுத்திட்டங்களுக்கான முழு நடவடிக்கைகளையும் வலி. மேற்கு பிரதேச செயலர் ஏ. மோகனறாஸ் மேற்கொண்டு வருகின்றார். (உ-49)

## அடிக்கல் நாட்டுவிழா

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்ட தொழில் திணைக்கள அலுவலகக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கிளி மாவட்ட சிரேஷ்ட தொழில் திணைக்கள உத்தியோகத்தர் திருமதி வீ.ஆனந்த நடராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

தொழில் திணைக்கள எந்திரி சதானந்தன் கலந்து கொண்டு கட்டடத்தற்கான அடிக்கல்லினை சம்பிரதாய பூர்வமாக நாட்டி வைத்தார்.

கிளி.மாவட்ட அதிபர் தி. இராசநாயகம் தொழில் அலுவலகத்திற்கென அரை ஏக்கர் காணியை அரச காணியில் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## மூவாயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவத்தின்போது மனித பாவனைக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய சாயமூட்டிய இனப்பு வகைகளை விற்பனை செய்தவருக்கெதிராக யாழ். மாவட்ட உணவு மருநதுப் பரிசோதகர் ரி.மகாதேவனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் அண்மையில் விசாரணைக்கு எடுக்கபட்ட போது சம்பந்தப்பட்டவருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. (உ)

## கோழிகளுக்கு தடுப்பூசி

(பருத்தித்துறை)

கோழிகளுக்கு நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை கரவெட்டி காலநடை வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் பிரதி சனிக்கிழமைகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கோழிப்பண்ணையாளர்கள் தங்கள் கோழிகளுக்கு நோய்த தடுப்பூசிகளை இங்கு ஏற்றிக் கொள்ளுமாறு கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எம.சறோஜினிதேவி கோழிப்பண்ணையாளர்களுக்கு அறிவித்துள்ளார். (உ-52)

## குழந்தை பராமரிப்பு விடுதி

(மருதங்கேணி)

முதிராத குழந்தைகளினை பராமரிக்கும் விடுதி ஒன்று வவுனியா பொது மருத்துவமனையில் விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஜப்பான் அரசின் அனுசரணையுடன் 5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்த விடுதிக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (உ-35)

## ஆர்ப்பாட்டம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சுகாதார சேவைகள் தொழிற் சங்கக்கூட்டமைப்பு, எதிர்வரும் 9ஆம் திகதி நடத்தத்திட்டமிட்டிருந்த அடையாள வேலை நிறுத்தத்தையும், ஆர்ப்பாட்டத்தையும் இடைநிறுத்தி வைப்பது என தீர்மானித்துள்ளது.

சுகாதாரத் துறையில் இருந்து வரும் சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடாபான அமைச்சரவை அறிக்கை இம்மாதம் 10ஆம்திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் பீ.தயாரத்ன அறிவித்துள்ளதையடுத்தே சுகாதார சேவைகள் தொழிற்சங்க கூட்டமைப்பு இத்தீர்மானத்தை எடுத்துள்ளது. (உ-60,10)


## யார் இந்த மீனா?

கல்வி ஒவ்வொரு பிள்ளையினதும் அடிப்படை உரிமை. கல்வி ஒவ்வொரு பிள்ளையினதும் அறிவையும் திறன்களையும் அதிகரிக்கின்றது. புதிய தகவல்களைக்கொடுக்கின்றது. முன்னேற்ற வசதிகளையும் அளிக்கின்றது.

பாடசாலைக்குப் போகும் பிள்ளைகள் தாம் வளர்ந்த பின்பு சந்திக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கையாளுவதற்குத் தேவையான தன்னம்பிக்கையினைப் பெறுகின்றார்கள். பெண்பிள்ளைகளுக்கு சமத்துவத்தை அடைவதற்கான முதற்படியாக பாடசாலைக் கல்வி அமைகின்றது. கல்வி கற்கும் வசதி அவர்களுக்குக் கூடிய தகவலகளைப பெற வழி செய்வதோடு, கூடிய போசாக்கு, சுகாதார கவனிப்பு ஆகியவற்றைக் கொடுக்கின்றது. கலவி கற்ற பெண்கள் சுகாதாரமான, மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையைப் பெறுவதோடு சமூகத்திலும் பயனுள்ள பங்கை வகிப்பர்.

மீனா போல ஒரு நாளைக்கு செயற்படுதல் எவ்வாறென்பதை ராஜு அறிந்து கொள்வது நாளை வலம்புரியில்...



உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-
அறை எண்30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம். (C/6946)

unicef

# துர்தேவதைகளை விரட்டும் நோக்கில் திரவம் அருந்தியோர் உயிரை மாய்த்தனர்

(கின்ஷாசா)

ஆபிரிக்க நாடான கொங்கோவில் துர்தேவதைகளை விரட்டுவதாக கூறி பாதிரியார் ஒருவர் கொடுத்த எண்ணெய் போன்றதொரு திரவத்தை அருந்திய 64பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

அதிரவத்தை அருந்திய ஏனைய பலா உடல் நலம் மிகவும் மோசமடைந்து காணப்படுவதாக அந்நாட்டின் சுகா தாரத்துறை அமைச்சர் யாகிசிட் டோலோ தெரிவித்துள்ளார்.

கொங்கோவின் போஸேபே என்ற கிராமத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய மதகுரு அப்பகுதியை விட்டு தலைமறைவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கொங்கோவின் சிலபகுதிகளில் தற்போதும் மூடக் கொள்கைகள் இருந்து வருகின்றன. இதனைப் பயன்படுத்தி மதங்களின் பெயரால்தவறான வழிகளில் சிலர் பணம் திரட்டி வருகின்றனர்.

இவ்வாறே போஸேபே கிராமத்தைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்க பாதிரியார் ஒருவர் அங்குள்ளவர்களை துர்தேவதைகள் பீடித்திருப்பதாகவும் அவற்றை விரட்டுவதாகவும் கூறி எண்ணெய் போன்றதொரு திரவத்தை அக்கிராம மக்களுக்கு கடந்த வாரம் வழங்கியுள்ளார்.

இதனை அருந்தியவர்களே இவ்வாறு மரணமடைந்தும் பாதிப்புக்குள்ளாகியும் உள்ளனர். (உ-2)



நைஜீரியா தலைநகர் அபுஜாவுக்கு வந்துள்ள பிரிட்டிஷ் அரசி எலிசபெத்தை வரவேற்கிறார் நைஜீரிய உர்ஹோபோ பழங்குடி இனத்து அரசர் ஒகியாமே அடுன்வாஸி (இடமிருந்து 2வது).

## அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்கு சீனா சாதகமான நடவடிக்கை

(பெய்ஜிங்)

மிக முக்கிய உபகரணங்கள், தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதில் கட்டுப்பாடுகளை விதிக்கும் பொருட்டு புதிய சட்டங்களை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது.

சீனாவின் வர்த்தக அமைச்சும் சுங்கத் திணைக்கள பொது நிர்வாகமும் இணைந்து வெளியிட்டுள்ள இச்சட்ட விதிகள் மூலம் ஆயுத உற்பத்திகளைக் கட்டுப்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சில சீன நிறுவனங்கள் ஆயுதங்களையும் தொழில்நுட்ப வளங்களையும் ஈரான் உட்பட பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வரும் நிலையிலேயே சீனா இந்த சட்ட விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. (உ-2)

## வறுமையால் வாடும் பாக். மக்களுக்கு புத்துயிரூட்டும் முயற்சியில் உலக வங்கி

(நியூயோர்க்)

பாகிஸ்தானில் நிலவிவரும் வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கு வட்டியில்லாக் கடன் வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது.

உலக வங்கியின் பணிப்பாளர் சபை நேற்று முன்தினம் கூடி எடுத்த தீர்மானத்துக்கு அமைய இப் பணிக்காக 1200கோடி ரூபா பாகிஸ்தானுக்கு வழங்கப்படவுள்ளதாக உலகவங்கி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பாகிஸ்தானின் 149 மில்லியன் சனத்தொகையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 32 சதவீதத்தினர் பல்வேறுவழிகளில் பயனடைவர் என பாகிஸ்தானின் நிதியமைச்சர் சௌக்ஹாத் அஸீத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உலகவங்கியால் வழங்கப்படவுள்ள இக்கடனைத் திருப்பிச் செலுத்த பாகிஸ்தானுக்கு 10ஆண்டுகள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (உ-9)

## போலந்துப் பிரதமர் மில்லர் ஹெலி விபத்தில் படுகாயம்

(வார்ஸா)

போலந்து பிரதமர் லேஸெக் மில்லர் பயணம் செய்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் அவரும் அவருடன் கூடச் சென்ற 7 பேரும் படுகாயமடைந்துள்ளனர்.

இயந்திரக் கோளாறு காரணமாக போலந்தின் தலைநகர் வார்ஸா பகுதியில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டபோதே இக் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகியுள்ளது.

பிரதமர் லேஸெக் மில்லரிற்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதால் அவர் தீவிரச் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அடுத்த வாரம் அயர்லாந்துக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவிருந்த பிரதமர் லேஸெக் தனது விஜயத்தை பிற்போட்டுள்ளார். (உ-2)



17 மணித்தியாலங்கள் இடைவிடாது வானில் பறந்து சாதனை படைத்து மீண்டும் விமான நிலையத்தை வந்தடைந்த நவீனரக டுபாய் விமானம்.







மத்தியப் பிரதேச மாநிலங்களவைத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து முதல்வர் பதவியில் இருந்து விலகிய திக்விஜய் சிங் சோகமே உருவாகக் காட்சியளிக்கிறார்.



மத்தியப் பிரதேச மாநில சட்டமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 230 தொகுதிகளில் சுமார் 173 தொகுதிகளை பா.ஜ.க கைப்பற்றி அமோக வெற்றியைப் பெற்றுள்ளது. முதல்வராக அக்கட்சியின் முக்கிய தலைவர் உமாபாரதி பதவியேற்கிறார். பா.ஜ.க.வின் வெற்றியை விசிலடித்துக் கொண்டாடும் பெண் ஆதரவாளர்கள்.

## ஐவரிக்கோஸ்ட் அரசும் தீவிரவாதிகளும் ஆயுதக் களைவுக்கு உடன்பாடு

(அபிட்ஜான்)

ஐவரிக்கோஸ்டின் அரசாங்கமும் தீவிரவாதிகளும் ஆயுதக் களைவு குறித்த உடன்பாட்டிற்கு வந்துள்ளன.

தீவிரவாதிகளிடம் இருக்கின்ற ஆயுதங்களைக் களைவதற்கான பணிகள் இந்தமாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகும் என்று இரு தரப்பினரும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் தங்களது நிலைகளுக்கு மீண்டும் திரும்புவது என்றும், சர்வதேச அமைதி காக்கும் படையினர் அப் பகுதிகளில் போர் நிறுத்தத்தை கண்காணிப்பார்கள் என்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இரண்டு தரப்பினரும் தம்மிடம் இருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கும் உடன்பாடு கண்டுள்ளனர்.

இந் நிலையில், தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் சென்று போர் ஓய்ந்துவிட்டது என விரைவில் தாம் பிரகடனம் செய்ய விருப்பதாக ஐவரிக்கோஸ்டின் ஜனாதிபதி லோரன் ஷிபாவோ தெரிவித்துள்ளார். (உ-9)

## ரஷ்ய நாட்டிற்குள் சட்ட விரோதமாக நுழைந்த 44 இந்தியர்கள் கைது

(மொஸ்கோ)

ரஷ்ய நாட்டிற்குள் சட்டவிரோதமாகக் குடியேற முயன்ற 44 இந்தியர்களையும் இவர்களுக்கு உதவி புரிந்த 2 ரஷ்யர்களையும் அந்நாட்டு குடியகல்வு குடிவரவுத் துறையினர் கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

ரஷ்யாவில் சட்டவிரோதக் குடியேற்றங்கள் இடம் பெறுவதைத் தடுப்பதற்கு அந்நாட்டு அரசாங்கத்தால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் கடந்த புதன் கிழமை ரஷ்யத்தலைநகர் மொஸ்கோவின் எல்லையை கடக்க முயன்ற 44 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-2)

## அமெரிக்க அவுஸ்திரேலிய கூட்டு ஏவுகணைத் திட்டம்

(கான்பரா)

அமெரிக்காவுடன் இணைந்து ஏவுகணைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அவுஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது.

இத்திட்டம் தமது நாட்டின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஏனைய நாடுகளை அச்சுறுத்துவதற்காக மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவுஸ்திரேலியப் பாதுகாப்பு அமைச்சர் அலக்ஸாண்டர் டௌனர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்காவுடன் எந்தவொரு ஒப்பந்தங்களும் இதுவரை செய்துகொள்ளப்படவில்லை எனவும், தற்போது இது பற்றிய உள்நாட்டுப் பேச்சுக்களே நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவின் இத்திட்டம் தொடர்பாக அமெரிக்கத் தரப்பில் இருந்து எந்தவொரு கருத்தும் வெளியாகவில்லை. (உ-2)

### ஈராக்கை மீளக் கட்டியெழுப்ப நேட்டோவின் பங்களிப்பை கோருகிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

போருக்கு பிந்திய ஈராக்கினை மீளக் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு நேட்டோ அமைப்பு முக்கிய பங்களிப்பு வழங்க வேண்டுமென அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவல் வலியுறுத்தியுள்ளார்.

நேட்டோ அமைப்பின் தலைமையகம் அமைந்திருக்கும் பிரஸல்ஸ் நகரில் நடைபெறவுள்ள அந்த அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் இந்த கோரிக்கையை கொலின் பவல் விடுக்கவுள்ளார்.

ஈராக்கை மீளக் கட்டியெழுப்பி அந்த நாட்டின் எதிர்காலத்தை பலப்படுத்துவதற்கு நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்கின்ற 19 நாடுகளும் பரந்த மனப்பான்மையுடன் செயற்பட வேண்டுமெனவும் இந்த மாநாட்டில் கொலின்பவல் கோரிக்கையினை விடுக்கவுள்ளார். (உ-2)



பாங்கொக்கில் உள்ள குரங்குகளுக்கான மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட குரங்குகள் சிகிச்சை பெற்றுவருகின்றன. இவ்வாறு இங்கு சிகிச்சை பெற வந்த குரங்கொன்று புகைப்படக் கருவிக்கு போஸ் கொடுத்த காட்சி.

# மகாவம்சம்

## தரும் இலங்கை வரலாறு

35

கலாநிதி க.குணராசா
(செங்கை ஆழியான்)

### பதின்மூன்று மன்னர்கள்

மகாவம்சத்தின் முப்பத்தாறாவது (XXXVI) அதிகாரம் மேலும் பதின்மூன்று மன்னர்கள் பற்றிய வரலாற்றைக் கூறுகின்றது. மாகல்லநாகனுக்குப் பின்னர் அவனுடைய மகனான **பாதிக்கதீசன** அரசனாகிறான். அவன் ஆட்சி இருபத்தினான்கு வருடங்கள் நீடித்தது. மகாவிகாரையைச் சுற்றிமதில் அமைப்பித்தான். தூபராம விகாரைக்கு உபோதச மண்டபமும் கட்டிவழங்கினான். பாதிக்கதீசனின் பின்னர் அவனது இளைய சகோதரன் **கனிஷ்டதீசன்** முடிபுனைந்தான். பதினெட்டு ஆண்டுகள் ஆண்டான். பல தூபிகளையும், விகாரைகளையும் கட்டுவித்த கனிஷ்டதீசன், நாகதீபத்திலுள்ள ஆலயத்தையும் புனருத்தாரணம் செய்வித்தான். மகாமேகவனத்திற்கு சுற்றிவர மதில் கட்டுவித்தான். அவனுக்கு பின்னர் அவனுடைய மகன் **குலநாகன்** மன்னனாகினான். குலநாகனின் தம்பி **குடநாகன** தமையனைக் கொன்று மன்னனானான். அவன் காலத்தில் கடும் பஞ்சம் நிலவியது. குடநாகனின் பட்டத்து மகசியின் சகோதரனான சேனாதிபதி **ஸ்ரீநாகன** மன்னனுக்கு எதிராகப் புரட்சி செய்து குடநாகனைத் துரத்திவிட்டு அரசனாகினான். அவன் நாட்டின் மன்னாக முடிதரித்தவன். ஸ்ரீநாகனின் மகனான **தீசன** ஆவான். பின்னர் **வொகாரிக்கதீசன** என அழைக்கப்பட்டான். நாகதீபத்தில் திஸ்ஸவிகாரையை கட்டு வித்தான்.

மன்னனின் இளைய சகோதரனான **அபயநாகன** மகாராணியின் கள்ளக் காதலனாவான். இது வெளியில் தெரியவந்ததும் தப்பி ஓடி நம்பிக்கையான வீரர்களையும், தமிழ் போர்வீரர்களையும் சேர்த்துக் கொண்டு அனுராதபுரத்திற்கு வந்து வெற்றிகொண்டு முடிதரித்தான். மலைநாட்டிற்குத் தன் மனைவியோடு தப்பியோடிய தமையனைத் துரத்திச் சென்று கொன்றுவிட்டு அவன் மனைவியோடு திரும்பி வந்தான். அபயனின் மரணத்திற்குப் பிறகு, தமையனின் மகனான **ஸ்ரீநாகன்** என்பான் அரசனானான். அதன்பின் அவனின் மகனான **விஜயகுமாரன்** மன்னனாக முடிதரித்தான்.

மகியங்கணையில் வாழ்ந்திருந்த **சங்ஹதீசன், சங்கபோதி, கொடாபயன** ஆகிய மூன்று இலம் பக்கர்ண நண்பர்கள், மன்னனின் சேவையில் பணியாற்ற அனுராதபுரத்திற்கு வந்தனர். திஸ்ஸ குளத்தினருகாக அவர்கள் நடந்து வந்து கொண்டிருந்த போது ஒரு அந்தகன், ''இந்த மண்ணினை ஆளப்போகும மூவர் செல்கிறார்கள்'' என உரைத்தான். அவர்கள் அதன் பின்னர் அரசனுடைய பணியில் ஆலோசர்களாகப் பணியாற்றி, மன்னனை எவரும் அறியாது கொன்று, **சங்ஹதீசனை** மன்னாக்கினர். அவனை நஞ்சூட்டிக்



## ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலை

# பேராசிரியரின் உண்ணாவிரதம் வெற்றிகரமாக நிறைவு

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுவந்த பேராசிரியர் கருணாரட்ணா நேற்று முன்தினம் முதல் தனது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளார்.

மேற்படி பல்கலைக்கழக துணை வேந்தர் டி.எஸ்.எப்பிடவத்தையைப் பதவியில் இருந்து விலக்குவது என ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதியின் செயலகத்தால் துணை வேந்தர் எப்பிடவத்தைக்கும் சகல விரிவுரையாளர்களுக்கும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே பேராசிரியர் கருணாரட்ணா தனது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளார். ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஸ்திரமற்ற தலைமைத்துவம் ஆகிய குற்றச்சாட்டுக்களின் பிரகாரம் கலாநிதி டி.எஸ்.எப்பிடவத்தையைத் துணை வேந்தர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் எனக்கோரி மேற்படி விரிவுரையாளர் கடந்த 2ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திவந்தமை தெரிந்ததே.

(உ-60,10)

# தனியார் பஸ் உரிமையாளர்கள் சாகும்வரை உண்ணாவிரதம்?

(கொழும்பு)

அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனம் பஸ் கட்டணததை அதிகரிக்க உள்ளதாக அறிவித்துள்ளது. டீசல் விலை அதிகரிப்பு மற்றும் வற்வரி காரணமாகவே இக்கட்டணம் அதிகரிப்புச் செய்யப்படவுள்ளதாக சம்மேளனத் தலைவர் லுகன் சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொண்டு வந்த தமது போராட்டம் போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பனவின் உறுதி மொழிகளை அடுத்து தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது என்றும் தமது கோரிக்கைகளுக்கு திருப்திகரமான பதில் விரைவில் கிடைக்காவிட்டால் சகல தனியார் பஸ் உரிமையாளர்களையும் கொழும்புக்கு அழைத்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

அத்துடன், எதிர்வரும் ஜனவரி மாதத்திற்கு முன்னர் தமது கோரிக்கைகள் பூர்த்திசெய்யப்படாது விட்டால் ஜனவரிமாதம் 5ஆம் திகதி முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-60,10)

# தொற்று நோய்களின் பிடியில் தோப்புக் காட்டுக் கிராமம்

(காரைநகர்)

காரைநகர் தோப்புக்காட்டுக் கிராமம் பெரும் தொற்றுநோய் அபாயத்தை எதிர்கொண்டுள்ளதாக அப்பகுதி மக்கள் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய மாரிமழை காரணமாக இக்கிராம வீதிகள் வெள்ளததினுள் மூழ்கி இருப்பதுடன், வீடுகள் பலவும் வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளன.

இந்த நிலையில், சிறுவர்கள் மத்தியில் வாந்திபேதி, காய்ச்சல் போன்ற தொற்றுநோய்கள் பரவ ஆரம்பித்துள்ளன. இவை வேகமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இங்கு நிலவும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உட்பட எவரும் முன்வராத நிலையில், நாளுக்குநாள் சுகாதார நிலைமை மோசமடைந்து செல்கின்றது.

இதன் காரணமாக இங்கு வாழும் 168 குடும்பங்களைச் சேர்ந்த 745 பேர் தொற்றுநோய் மற்றும் அதனால் உண்டாகும் உயிராபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்விடயம் குறித்து காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம் பசிவத்திடமும் சம்பந்தப்பட்ட மக்கள் முறையிட்டுள்ளனர்.

(உ-246)

வேறு நாடுகளுக்குச் சென்றுவரும் கனடாப் பிரஜைகளை

சங்ஹ தீசனை மண்ணாக்கினா்.

அவனை நஞ்சூட்டிக் கொன்று சங்கபோதி, ஸ்ரீசங்கபோதி என்ற நாமத்துடன் அரசனானான். பின்னர் கொடாபயன், சங்கபோதியை துரத்திவிட்டு மன்னனாகினான்.



மிருசுவெட்டித் தூபி

ஸ்ரீசங்கபோதி, கொடாபயனின் படையோடு மோத விரும்பாது நகரின் தென்வாயில் வழியாகக் காட்டுக்குத் தப்பி ஓடினான். அவன் மீண்டும் அரசைப் பெறுவதைத் தடுக்கும் நோக்குடன் கொடாபயன், ஸ்ரீசங்கபோதியின் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு பரிசு அளிக்கப்படும் என அறிவித்தான். தனக்கு உணவும் நீரு[illegible]ளித்த உழவனுக்குத் தன் தலையைக் கொண்டு போய் மன்னனிடம் கொடுத்து பரிசுபெறுமாறு கூறித் தன் தலையைத் துண்டித்து வழங்கினான் என மகாவம்சம் கூறும்.

தனது ஆட்சிப் பெயராக மேகவண்ண அபயன் எனக் கொண்டான். அதன் பின்னர் அவனது மகனான ஜெட்டதீசன் முடிதரித்தான்.

ஜெட்டதீசன் தனது முடியுரிமையை விரும்பாத அமைச்சர்களையும், ஏனையோரையும் அழித்துள்ள முறைவியப்பானது. தந்தையின் இறுதி மரண ஊர்வலத்தில் ஜெட்டதீசனின் தம்பி முன்செல்ல, அவனைத் தொடர்ந்து இறந்த மன்னனின் சிதை சென்றது. அதன்பின்னர் அமைச்சர்கள் சென்றனர். இறுதியில் ஜெட்டதீசனும் அவனாட்களும் சென்றனர். கோட்டைவாயிலை விட்டு சிதை வெளியேறியதும் வாயில் உடனடியாகி மூடப்பட்டு, அமைச்சர்கள் அனைவரும் ஜெட்டதீசனின் வீரர்களால் கொல்லப்பட்டனர்.

இந்தப் பதின்மூன்று மன்னர்களது ஆட்சி கி.பி.199 இலிருந்து கி.பி.325 வரை நிலவியது.

(தொடரும்)

வேறு நாடுகளுக்குச் சென்றுவரும் கனடாப் பிரஜைகளை

# நிரந்தர வதிவிட அட்டைகளை வைத்திருக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

கனடா நாட்டின் நிரந்தர வதிவிடதாரிகள் அனைவரும் இம் மாதம் 31ஆம் திகதிமுதல் நிரந்தர வதிவிட அட்டைகளை வைத்திருக்க வேண்டும் என இலங்கைக்கான கன[illegible]டாத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிககப்பட்டுள்ளது.

குறிப்பாக கனடாவில் இருந்து வேறு நாடுகளுக்குச் சென்றுவரும் கனடாப் பிரஜைகள் மீண்டும் கனடா வந்தடையும் போது, தமது நிரந்தர வதிவிட [illegible]ட்டைகளை கனடா குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் காண்பிக்க வேண்டும்.

கனடா நாட்டு நிரந்தரப் பிரஜைகள் அங்கு வந்தடைந்ததும் அவர்கள் வந்து சேர்ந்ததை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமான ஐ.எம்.எம். தௌசென்ஸ் என்ற சான்றிதழுக்குப் பதிலாகவே நிரந்தர வதிவிட அட்டைகள் வழங்கப்படுகின்றன.

கனடாவின் நிரந்தர வதி[illegible]ப பிரஜைகளுக்கான வதிவிட அத்தாடசிக்குரிய சான்றாக இப்புதிய அட்டை கருதப்படுவதனால் இதுவரை நிரந்தர வதிவிட அட்டைகளைப் பெறாதவர்கள் கனடாவில் உள்ள பிரஜாவுரிமை மற்றும் குடிவரவு சம்பந்தமான வெப் தளத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என கனடாத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-60,10)

## உத்தியோகபூர்வமாக விண்ணப்பிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைப் பிரஜாவுரிமை பெறுவதற்காக உ[illegible]த்தியோகபூர்வமாக விண்ணப்பிக்க வேண்டும் என உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை ஆட்பதிவுத் திணைக்களம், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும், விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஜனவரி மாததத்திற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் உள்துறை அமைச்சு மேலும் கேட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு 35ஆம் இலக்க சட்டமூலத்தின் பிரகாரம் இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்கவுள்ளமை தெரிந்ததே. (உ-61,10)

# முதலாவது டெஸ்டில் இலங்கை அணி 88 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது

சங்கக்காரவின் சிறப்பான துடுப் பாட்டம், முரளியின் துல்லியமான சுழலில் இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்டில் இலங்கை அணி 88 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இத்தொடரில் முதலாவது போட்டி கடந்த சனிக்கிழமை முதலாம் திகதி தொடக்கம் கண்டி சுஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா முதலில் துடுப் பெடுத்தாட தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஹோகாட் மற்றும் பனீசரின் சிறப்பான பந்துவீச்சினால் தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 188 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

## சங்கக்கார ஆட்டநாயகனாகத் தெரிவு

துடுப்பாட்டத்தில் குமார் சங்கக்கார 92 ஓட்டங்களையும், பிரசன்ன ஜெயவர்த்தனா 52 ஓட்டங்களை



யும் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஹோகாட் 4 விக்கெற்றுக்களையும் பனீசர் 3 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முரளியின் துல்லியமான சுழலில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 281 ஓட்டங்களை பெற்று இலங்கை அணியை விட முதலாவது இன்னிங்சில் 93 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது.

இதில் பெல் 83ஓட்டங்களையும் ஹொலின்வூட் 45 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை அணிசார்பாக சாதனை நாயகன் முரளி 6 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி குமார் சங்கக்காரவின் சிறப்பான சதத்தினால் 6 விக்கெற்றுக்களை இழந்து 442 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் குமார் சங்கக்கார 152 ஓட்டங்களையும், ஜெயசூர்யா 72 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்த்தனா 65 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக பனீசர் 3 விக்கெற்றுக்களையும்ஹோகாட்மற்றும்ஹொலின்வூட் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து வெற்றிக்காக 350 ஓட்டங்களைபெற வேண்டும் என்ற இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி போட்டி முடிப தற்கு 8 ஓவர்கள் மிதமுள்ள நிலையில் சகல விக்கெற்றுக்களையுமி ழந்து 261 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 88 ஓட்டங்களால் தோல்விய டைந்தது.

இதில் டெல் 74 ஓட்டங்களையும் பிறிர் 63 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக சமிந்த வாஸ் மற்றும் முரளி ஆகியோர் தலா 3 விக்கெற்றுக் களையும் பெனான்டோ 2 விக்கெற்றுக் களை யும் வீழ்த்தினர்.

போட்டியில் ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் வெற்றிக்கு



திருப்புமுனையாக செயல்பட்ட குமார் சங்கக்கார தெரிவானார். இவ் வெற்றியும் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது. இரண்டாவது போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. (5)

## டெஸ்டிலிருந்து ஓய்வுபெற்றார் அதிரடி நாயகன் ஜெயசூர்யா

கண்டியில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியுடன், அதிரடிவீரர் ஜெயசூர்யா (38) டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றார். கண்டிமைதானத்தை சுற்றிவந்து ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்த அவர் கண்ணீருடன் விடை பெற்றார்.

ரசிகர்கள் அனைவரும் எழுந்து நின்று கைதட்டி அவருக்கு விடை

விளையாட்டு

கொடுத்தனர். சக வீரர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். 110 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 6 ஆயிரத்து 973 ஓட்டங்கள் (அதிக பட்சம் 340, சராசரி 40.07, சதம் 14, அரைசதம் 31, சிக்சர்கள் 59, பிடிகள், 78 விக்கெற் 98) குவித்துள்ளார். தனது கடைசி இன்னிங்சில் 78



ஓட்டங்கள் அடித்த அவர் ஆன்டர்சன் வீசிய ஒரு ஓவரில் 6 பௌண்டரிகளை விளாசி தனது முத்திரையைப் பதித்தது குறிப்பிடத்தக்கது. (5)

## முரளியின் பந்தில் சிக்ஸர் அடிக்க ஆசையா?

உலகின் அதிக டெஸ்ட் விக்கெற்றுக்கள் கைப்பற்றிய சாதனை நாயகனாக விளங்கும் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் உங்களுக்கு பந்துவீசி, அந்த பந்தை சிக்சருக்கு விரட்ட வேண்டும் என்பது உங்களது நீண்ட நாள் கனவா? அப்படி என்றால் அந்த வாய்ப்பை பெற நீங்கள் இணையத்தின் (online) மூலம் போட்டி போடலாம். ஆனால் அதற்கு பணத்தை வாரி இறைக்க வேண்டும். E-pay என்ற இணையத்தளம் இதற்கான ஏலம் ஒன்றை நடத்தி கொண்டிருக்கிறது.

யார் அதிக-பணம் செலுத்த முன் வருகிறார்களோ அவருக்கு முரளி



தரன் பந்து வீசுவார். ரூ 1.501இல் தொடங்கிய ஏலத்தில் இப்போது ரூ.2 இலட்சம் வரை வழங்க முன் வந்துவிட்டனர். 18க்கும் மேற்பட்டவர்கள் போட்டியில் குதித்துள்ளனர். எதிர்வரும் 11ஆம் திகதி வரை இந்த ஏலம் நடக்கும். இதன் மூலம் கிடைக்கும் தொகையை தனது சொந்த அறக்கட்டளைக்கு பயன்படுத்த முரளிதரன் திட்டமிட்டுள்ளார்.

ஏலத்தில் அதிக தொகை கொடுக்கும் நபரு டன் வருகிற 16ஆம் திகதி முரளிதரன் கிரிக்கெற் ஆடுகிறார். காலி மைதானத்தில் இந்த போட்டி நடக்கும். ஸ்லிப்பில் அணித் தலைவர் ஜயவர்த்தனா நிற்பார். விக்கெற் கீப்பராக சங்கக்கார வருவார். முரளிதரன் ஓப்-பிரேக், தூஸ்ரா என்று மொத்தம் 10 பந்துகளை வகை வகையாக வீசுவார். (5)


## பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

அன்னலிங்கம் நாகேந்திரன் பெண்
ஜீவமலர்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
- வழக்காளி

## அழைப்புக் கட்டளை இல.16-பிரிவு55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள / மாவட்ட நீதிமன்றில்

விக்டர் அன்ரன் றிச்சேட்
பெண் கிறிஸ்ரீனா,
70/2, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
- வழக்காளி

# பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

அன்னலிங்கம் நாகேந்திரன் பெண்
ஜீவமலர்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
- வழக்காளி

வழ: இல, மணநீக்கம்/803

எதிராக
அன்னலிங்கம் நாகேந்திரன்
10, பெரியதம்பிரான் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
எதிராளி

இவ்வழக்கு 2007ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 6ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பதில் மாவட்ட நீதிபதி திரு.மு.திருநாவுக்கரசு அவர்கள் முன்னிலையில் வந்த போது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திரு.வை.த.சிவலிங்கம் அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக்கட்டளை மன்றின் கட்டளைப்படி வலம்புரி தேசிய தினசரிப் பத்திரிகையில் 04.10.2007ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டு பதில் சேவகம் மூலம் சேவிக்கப்பட்டு எதிராளி 09.10.2007இல் எதிராளி மன்றில் சமூகமின்மையால் இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின் அனுமதியைக் கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் சாட்சியம் வழக்கேட்டில் அணைக்கப்பட்ட ஆவணங்களை ஒப்பு நோக்கி 2005ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22ஆம் திகதி வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் நடைபெற்ற பதிவுத் திருமணத்தை எதிராளி வழங்காளியை வேண்டுமென்று விட்டுப்பிரிந்து சென்று வன்ம உறவுறுப்புச் செய்தார் என்ற காரணத் திற்காக இத்தால் இரத்துச் செய்து வெற்றும் வெறிதுமாக்கி கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி வலம்புரி பத்திரிகையில் பிரசுரித்து எதிராளிக்கு பதில் சேவகம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப் பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2007ம் ஆண்டு கார்த்திகை மாதம் 6ஆம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி

வரைந்தது
வழக்காளியின் சட்டத்தரணி

து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(662)

# அழைப்புக் கட்டளை இல.16-படிவம் (1)

## யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள / மாவட்ட நீதிமன்றில்

விக்டர் அன்ரன் றிச்சேட்
பெண் கிறிஸ்ரீனா,
70/2, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
- வழக்காளி

வழக்கு இல, மணநீக்கம்/801

எதிர்
விக்டர் அன்ரன் றிச்சேட்
மே/பா.விஜி மேகலா,
42 புங்கங்குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
-எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு
மேலே பெயர் குறிப்பிட்டுள்ளவழக்காளி

தனக்கும் உமக்குமிடையே மணநீக்கம் கோரி.

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின்; 2007 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பதினோராம் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப் படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக் கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

என்னால் வரையப்பட்டது
கனகரத்தினம் அலோசியேஸ்
வழக்காளியின் சட்டத்தரணி

குறிப்பு :-விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ் வழக்கு கூப்பிடுந் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்து உதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப் பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80-ம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
கையொப்பம் பதிவாளர்

2007ஆம் ஆண்டு மார்கழி மாதம் 6ஆம் நாளாகிய இன்று

(663)

# முதுகலைமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா

# நேர்முகத் தேர்வுக்கு தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வியியல் முதுகலைமாணி கற்கை நெறிகளுக்கான தெரிவுப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை யாழ். பல்கலைக் கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வகையில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 14, 15ஆம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரையும் கல்வியியல் முதுமலைமாணி கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 16, 17ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரையும் நடைபெறவுள்ளது.

மேற்படி நேர்முகத் தேர்வுகளுக்கு அழைக்கப்பட்டோர் விவரம்:-

**பட்டப்பின் கல்வி டிப்ளோமா -யாழ்ப்பாணம்**

செல்வி அ.மதிவதனி, திருமதி ஏ.ஜே.கிறேஸ் கேசனி, செல்வி அ.மஞ்சுளா, செல்வி அ.ஜெயராணி, ப.அருந்தவம், செல்வி ஐ.சசிசுகேதினி, திருமதி பா.ரஞ்சினி, செல்வி பா.ஜெயசீதா, சி.பாலமுருகன். திருமதி பா.ஜெயதாம்பிகை.

செல்வி பா.சுபாஜினி, செல்வி ச.சுமணா, திருமதி டு.பிறின்சிஸ் மேரி தேவஹர்சினி, ஜே.எட்வின், சு.ஹரிஹரகணபதி, எஸ். மேரியூட் லூமினாஜெரி, திருமதி ஞா.கமலேஸ்வரி, பா.கோபிதாஸ், திருமதி கு.உதயதர்சினி, செல்வி கு.சிவகௌரி.

திருமதி ஜே.சத்தியமாலினி, பு.ஜெகதீஸ்வரன், திருமதி ஜெ.சிவசக்தி, க.ஜெயவீரசிங்கம், செல்வி க.சுமதி,செல்வி.க.சுமதி, வே.கணேசலிங்கம், திரு மதி க.தமயந்தி, கு.கண்ணதாசன், திருமதி க. வானதி, செல்வி கி.தயாநிதி.

ஜெ.கோவுலவாசன், க.குமரன், ந.குமரகுருபரன், கா.குமரபரன், செல்வி ல.புவனேஸ்வரி, பா.லோகேஸ்வரன், திருமதி லோ.தயாளினி, செல்வி ம.றஜினி, செல்வி ம.வசந்தமலர், ம.முரளீதரன்.

செலவி மு.நனிதபாமினி, பொ.நடேசலிங்கம், கோ.நக்கீரன், இ.நவகேதீஸ்வரன், செல்வி ந.பிரதா, செல்வி ந.தாக்சாயினி, திருமதி நி.தயாளசுந்தரி, செல்வி ஒ.சுமதி, செல்வி ப.ஜெயரூபி, செல்வி பே.நிகிலதீஸ்வரி.

செல்வி பொ.ரேணுகா, திருமதி பி.சிந்துஜா,செல்வி இ.விநிதா, செல்வி இ.ரஜினி, கு.ரமணீதரன், திருமதி ர.ஜெயவதனா, செல்வி இ.புஸ்பலதேவி, செல்வி இ.பிரியதர்சினி, திருமதி இ.கலைச்செல்வி, திருமதி இ.ஜெயானி.

திருமதி ஆர்.லலிதா, திருமதி ஜெஸ்ரலின் றிச்சாட் றேமன், சு.சரவணபவன், கு.சரவணேஸ்வரன், மா.பாநாதன், வே.சசிகுமார், செல்வி ச.சங்கரி, ச.சத்தியவரதன், திருமதி ச.பத்மலோசனி, திருமதி ச.செல்வராணி.

செ.ஜெகதாம்பிகை, ச.சபாநாதன், கோ.சண்முகக்குமார், திருமதி ச.பவானி, செல்வி சி.லோகேஸ்வரி, செல்வி சி.பிருந்தா, திருமதி சி மகாதேவி, செல்வி சி.கல்யாணி, த.சிவகுமரன், திருமதி சி. தனலக்சுமி.

செல்வி சி.கலாரஜனி, திருமதி சி.உதயகலா, சோ.சிவனேஸ்வரன், சு.சிவபாலன், செல்வி சி.ரூபகௌரி, கு.சோமஸ்கந்தமூர்த்தி, இ.ஸ்ரீரங்கநாதன், திருமதி சி.ஜெயந்தி, இ.சுப்ரமணியம், க.சுதாஸ்குமார்.

இ.தமிழ்மாறன், செல்வி த.கேதினி, திருமதி த.கணேஸ்வரி, செல்வி த.ஜெயகௌரி, செல்வி த.பங்கஜச்செல்வி, செல்வி த.புஸ்பலக்சுமி, க.தர்மதேவன், ச.தயானந்தன், திருமதி த.விஜிதா, தி.தீபன், திருமதி பற்றீசியாதேவா.

தி.தவக்குமார், செல்வி கிறேசிதேவா தயாளினி, ப.திருக்குமார், செல்வி தி.கலையரசி, பிரான்சிஸ் தோமஸ் எடிசன், செல்வி து.பொன்னரசி, செல்வி து.அஜந்தா, செல்வி வே.பத்மலோஜினி, செல்வி வே.நான்மதி, செல்வி வே.அற்புதமலர்.

தி.விக்னேஸ்வரன், த.விஜயகுமார், செல்வி வி.நீலாஜினி, ஜோவிதுபாகரன் ,செ.இளங்கோ, வே.ஜீவரூபன், செல்வி க.கிருபாமதி, ப.கமலதாசன், திருமதி லே.இலங்காராணி, சி.ஸ்ரீபால கிருஸ்ணப்பிள்ளை, இ.இராஜேஸ் கண்ணன், செல்வி சி.அபிராமி.

**பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதிநேரம்) வவுனியா**

திருமதி அபிரேமலதா, செல்வி மேரி டிவமா அந்தோனி, அந்தோனி முத்து அன்ரன் லீனஸ், சஞ்யூவம் அன்ரன் ஜினாயூட், திருமதி சுவந்திரா அரசரத்தினம், சதாசிவம் பாலச்சந்திரன், செல்வி ரதனி பாலசுந்தரம், செல்வி பேனாட் வாசுமதி றெஜினா றிவேல், செல்வி கிறிஸ்தோபர் ஹெலின் றோஸ்.

செபமாலை கொன்ரன்னான், மரியதாசன் இதயராஜன் குருஸ், செபஸ்தியாம் பிள்ளை பிரான்ஸிஸ், அரியரத்தினம் ஞானேஸ்வரன், செல்வமின்பாருமார் குருஸ், திருமதி ஜெயசனீஸ் சருபிரியா, செல்வி சுகந்தினி ஜெயஞானசேகரம், தங்கராஜா ஜெயகாந்தன், கனகசபை ஜெயகுமார்.

செல்வி ஞானசௌந்தரி ஜோசப், செல்வி கபிரியல் செபமாலை ஞானராணி, சின்னத்தம்பி கஜேந்திரன், செல்வி சிவதர்சினி கனகலிங்கம், செல்வி ஸ்ரெல்லா சுபத்திரா தேவி கந்தையா, தாமோதரம்பிள்ளை கணேசபாலேந்திரன், செல்வி கேசவன் சிவகுமாரி, திருமதி சுபாஜினி கேதீஸ்வரன், செல்வி கோமதி கிருஷ்ணபிள்ளை, செல்வி கோகிலதேவி குலசேகரம், செல்வி பூலோகசிங்கம் லோகேந்திரன், செல்வி மகேஸ்வரன் மங்களேஸ்வரி, ஜனாப் மொகமட் யூனுஸ் மாஹிர். சவிரி மரியதாஸ், செல்வி நாகராஜ ஜெயந்திமதி, செல்வி ராதிகா நாகராஜா, திருமதி நந்தினி நாகேஸ்வரன், செல்வி பாமதி நவரத்தினம், நித்தியலிங்கம் நாகலிங்கம், அல்பிரட் ஒலிவர் குலாஸ், இராசரத்தினம் பாக்கியநாதன், செல்வி பொன்னுச்சாமி ஆனந்தி, செல்வி சூரியகலா இராசரத்தினம், திருமதி தேனி வரோணிக்கா வெனிலாராவெல், திருமதி ரோபான் ஜெயந்தினி, சங்கரப் பிள்ளை சத்தியநாதன், செல்விநேசமலர் செபஸ்தியாம் பிள்ளை, செல்வி யஸ்மின் காமலா செல்வநாயகம், முனியடி சிவநாதன், சிவபாதம் ஸ்ரீஸ்கந்தராஜன், மரியதாசன் பெர்ணாலட் ஸ்ரீதரன், சிறிஸ்சண்முகன் ஸ்ரீ விமலகண்டன், திருமதி வாசுகி சுரேஸ், சிவசிதம்பரம் சுதந்திரன், செல்வி செந்தமிழ்ச் செல்வி தம்பையா, செல்வி செந்திருதன பாலசிங்கம், திரு நல்லதம்பி தயாபரன், செல்வி அல்பூன்ஸ் நவரத்தினம் வினிஸ்கோ, திருமதி ஜெயலட்சுமி விக்கினேஸ்வரன், திருமதி அமிர்தலக்ஷினி விமலதாஸ், குகதாசன் விக்னராஜா, ஜனாப் அப்துல கரீம், மொகமட் பரீட் ஜெயவதன, திருமதி செல்வராணி செல்வராஜன். செல்வி ரஞ்சனா கோபாலகிருஷ்ணன், செல்வி இந்துமதி கந்தசாமி, செல்வி தமிழ்ச்செல்வி கந்தசாமி, குண்டுமணி மனோகரன், செல்வி பேமிலா நவரத்தினம், செல்வி பொன்னையா காந்திமதி, தெய்வேந்திரன் பிரபாகரன், செல்வி இந்திராவதி ராஜரத்தினம், சிவானந்தம் ரங்காதரன், செல்வி சுகந்தினி சபாரத்தினம், செல்வி சுஜாதா சக்திவேல், கந்தசாமி சண்முகநாதன், செல்வி சசிகலா சற்குணலிங்கம், செல்வி தில்லைநாயகி செல்லபாக்கியம், செல்வி ஜீவா செல்வராஜா, வேலும்மயிலும் சேந்தன், செல்வி வசந்தி சண்முகம், செல்வி மாதினி சின்னத்தம்பி, சின்னத்தம்பி சிவானந்தம் முருகேசு சிவப்பிரகாசம், செல்வி மதிவதனி ஸ்ரீகரன், செல்லத்துரை சிறிகந்தசேகரம், திருமதி சிறிகர்ன் ஜெயந்தினி, வரதராஜசர்மா சுந்தரராஜன், செல்வி சசிலதா தர்மராஜா, செல்வி பூபாலசிங்கம் திருக்குமார், சண்முகம் விக்கினேஸ்வரன், திருமதி அழகுராணி சிவானந்தன்.

**கல்வியியல் முதுகலைமாணி யாழ்ப்பாணம்**

ஏ.ஆனந்தராஜ், செல்வி பி.அண்ணாமலை, பி.அரவிந்தன், திருமதி.வி.அசோகராஜா, செ.பாஸ்கரன், செல்வி வி.கந்தசாமி ஐயர், வி.சந்திரசேகர், இ.எல்விஸ், சி.பிரான்சிஸ் சேவியர்.

கே.ஞானகாந்தன், வி.இ.கஸ்ரன் றோவ், வண.கே.ஜேம்ஸ் சிங்கராஜர், செல்வி எஸ்.ஜெயக்குமார், திருமதி கே.ஜெயானந்தம், வி.ஜெயராஜ்,பி.கிருஷ்ணஜோதி, பி.கலையரசன்,சி.கலைச்செல்வன், திருமதி. பி.கனகநாயகம், இ.கந்தசாமி,

செல்வி கே.கந்தையா, ஆர்.கணேசநாதன், ஜி.கென்நத் மறியன், செல்வி ஜே.கிட்ணபிள்ளை, வி.குமாரவேலபிள்ளை, எ.குமரேசமூர்த்தி, செல்வி எஸ். லிங்கேஸ்வரன், எஸ்.மாணிக்கராஜ், என்.மனோரஞ்சிதன், செல்வி எம்.இ.பி. மரியதாசன்.

வி.மரியநாயகம், எஸ்.மோகனராஜன், எம்.முரளிதரன், செல்வி ஆர். நடராஜா, என்.நாகேந்திரன், செல்வி எஸ். நகுலேஸ்வரன், எம். நாகராஜா, செல்வி எஸ். நற்குணசிங்கம், செல்வி வி. பஞ்சாட்சரம், கே.பத்மாகரன், செல்வி எஸ்.பிரேம் குமார், கே.புஸ்பராஜா.

எம்.ரகுநாதன், எம்.ராஜ்குமார், வி.ராஜ்குமார், செல்வி கே. ராதாகிருஷ்ணன், கே.ரட்ணகுமார், ஆர்.ரவிச்சந்திரன், பி.ரவிச்சந்திரன், திருமதி.ஜே.சகாஜரூபன், எம்.சத்தியகுமார்,திருமதி எஸ்.செபமாலைதாஸன், செல்வி எம்.சபாரட்ணம்.

எஸ்.செல்வகுமார், திருமதி எம். சி.செல்வநாயகம், கே.செல்வரட்ணம், செல்வி எஸ். சேனாதிராஜா, திருமதி ஜி. சேதுராஜா, கே.சாந்திநாதன், கே.சிவகுமார், செல்வி எல்.ஏ.எஸ். சிவலிங்கம், எஸ்.சிவநாதன், திருமதி பி.சிவனேசன், வி. சிவனேசன், எஸ்.சிவனேஸ்வரன், செல்வி எஸ்.சிவபாதம்.

எஸ்.சோமசுந்தரம், பி.ஸ்ரான்லி ரஞ்சிதன், செல்வி ஆர்.சுப்பிரமணியக்குருக்கள், திருமதி ஆர்.சுஜந்தன், வி.சுந்தரலிங்கம், திருமதி எஸ்.தபேந்திரன், திருமதி ஆர். தனஞ்ஜெயன், எஸ். தனஞ்ஜெயன், செல்வி எஸ்.தங்கவடிவேலாயுதம், செல்வி வி.தவபாலன், கே.தவதீஸ்வரன், ரி.தவனேசன், திருமதி ரி.தவராஜா, திருமதி கே.தவராஜன், திருமதி ரி.தவேந்திரராஜா, சி.தயாபரன், ஜே.திருமூர்த்தி, வி.உதயமோகன், திருமதி ஆர். உதயரட்ணம், வி.விநாயகமூர்த்தி, செல்வி வி. விபுலராஜா, திருமதி கே.யோகேந்திரன்.

திருமதி அ.ராஜரூபினி, வேட் ரவீந்திரராஜா ஜாகூப் சாள்ஸ் நிமலன், செ.பரமசிவம், தி.றொபேட், செல்வி செ.வத்சலா, பூ.தேவராசா.

**கல்வியியல் முதுகலைமாணி வவுனியா**

திருமதி என்.அலெக்ஸ் கிப்சன், எஸ்.அல்பேட், செல்வி பி.அமலதாஸ், திருமதி என்.அமலதாசன், திருமதி அன்ரன் றெஜினோல்ட், எஸ்.அன்ரனி யோகானந்தன், திருமதி என்.அரவிந்தன், கே.அரியநாயகம், வண ஜி.அருள்பிரகாசம், ரி.அருமைத்துரை.

வண.ஜே.அகஸ்ரின், பி.பாலச்சந்திரன், பி.பாலகணேசன், செல்வி எஸ்.கிறிஸ்தோபர், எஸ்.ஆர்.கூரைதாஸ், எம்.ஆர்.பி.தாஸ், ஆர்.ஈஸ்வரதாஸன், திருமதி ஜி.கணேசலிங்கம், எஸ்.கணேசலிங்கம், திருமதி வி.குணநாயகம், திருமதி எஸ்.ஏ.சி. கிதயத்துல்லா, கே.கமலநேசன், செல்வி பி.கனகசபை, ஆர்.கருணாகரன், திருமதி சி.ஆர்.கோமதாஸ்.

செல்வி சி.ஜே. லாம்ப்பேட், ஆர்.லோகேஸ்வரன், ஏ.எம்.முகூப் மரிகார், எம்.சி.எல்.மனுவல், திருமதி எல்.மனுவல், டபிள்யூ.பி.எம்.ஏ. சொய்சா, எஸ்.மதியழகன், திருமதி ஜே.மதியழகன், ஏ.எம்.மிறல், எம். மோகநாதன், எஸ்.மோகநாதன், வி.முரளி, செல்வி.ரி.நகுலேசபிள்ளை, கே.நவரட்ணம், எஸ்.நித்தியநாதன்.

திருமதி என்.பரமலிங்கம், திருமதி எஸ்.பத்திநாதன், திருமதி பி. ஆர்.ஜே.பீரீஸ், எஸ்.ராஜா, திருமதி ரி.ராஜ்குமார், என்.ரங்கநாதன், செல்வி ஏச்.வி.ராசநாயகம், எம்.ரவீந்திரன், எம்.பி.ரவிச்சந்திரா, திருமதி எல்.ரவிராஜன், பி.சந்தியோகு, திரு மதி எஸ்.சத்தியசீலன், எ.செல்வநாயகம்,எஸ். செல்வராஜா, எல். சண்முகலிங்கம், ரி.சிறிதரன், வி.கே. சிவானந்தன், செல்வி கே.சிவப்பிரகாசம்.

திருமதி ஆர்.ஸ்கந்தராஜா, எம். சூசைதாஸன், திருமதி பி.சிறிகாந்தன், வி.சிறிகரன், கே.ஸ்ரீநந்தகோபன், வண ஜே. ஸ்ரனிஸ்ல்ஸ், என்.சுப்பிரமணியம். திருமதி பி.தனேஸ்வரன், ஜி.ரி.தர்மலிங்கம், திருமதி எம்.தர்மானந்தசிவம், கே.தர்மபாலன், எஸ்.தர்மரட்ணம், கே.உதயகுமார், ஜி.உதயரூபன்.

திருமதி ஆர்.வைரமுத்து, ரி.வரதன், திருமதி வி.விவேகராசா, எஸ்.விஜயசிங்க, கே.யோகராஜா, எம்.ஷியான், வை.குணரட்ணம், எம்.கே.மொகமட் லபீர், திருமதி எஸ்.சுந்தரராஜன், திருமதி பி.பெருமாள்.

# தாயக மண்ணின் பெருமையை காத்துக் கொள்ளுமா நியூசிலாந்து?

பாகிஸ்தானுக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து கிரிக்கெற் அணிக்கும் பாகிஸ்தான் கிரிக்கெற் அணிக்குமிடையில் நேற்று முன்தினம் ராவல்பிண்டி நகரில் நடைபெற்ற நான்காவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் 7விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணிவெற்றி பெற்றுள்ளது.

5ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டிகள் கொண்டஇத் தொடரில் இதுவரை நடைபெற்று முடிந்த 4போட்டிகளிலும் பாகிஸ்தான் அணிவெற்றிபெற்றிருப்பதுடன் தொடரையும் தனதாக்கிக் கொண்டுள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 47.5 ஓவர்கள் முடிவில் தனது சகல விக்கெற்றுக்களையும் இழந்து 183 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக கிரிஸ் ஹெயின்ஸ் 48 ஓட்டங்களையும், கிரிஸ்கரீஸ்25 ஓட்டங்களையும் அதிகபட்சமாக தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் சௌயிப்அக்தார் 23 ஓட்டங்களைவிட்டுக் கொடுத்து 3 விக்கெற்றுக்களையும், சொயிப்மலீக் 46 ஓட்டங்களைவிட்டுக்கொடுத்து 2 விக்கெற்றுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 41.2 ஓவர் முடிவில் 3 விக்கெற்றுக்களை மட்டுமே இழந்து வெற்றி இலக்கான 184 ஓட்டங்களைப் பெற்று 7விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வெற்றி கொண்டது.

பாகிஸ்தான் அணிசார்பில் துடுப்பெடுத்தாடிய இம்ரான்.:.பர்ஹாட் ஆட்டமிழக்காமல் 82 ஓட்டங்களையும், ஐசீர்ஹமீட் 61 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

இந்த வெற்றியினை அடுத்து, ஒரேயொரு போட்டி மட்டுமே இருந்த நிலையில் தொடரை 4:0 என்ற போட்டிப் பெறுபேறுகள் அடிப்படையில் பாகிஸ்தான் அணி வெற்றி கொண்டுள்ளது.

எனினும், எஞ்சியுள்ள ஒரு போட்டியிலாவது நியூசிலாந்து அணிவெற்றி பெற்று தனது தாயக மண்ணின் பெருமைகளை காத்துக் கொள்ளுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். (உ-68)

# வீர. வீராங்கனைகளுக்கு இன்று விசேட கூட்டம்

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் இவ்வாண்டில் நடாத்தப்பட்ட யாழ்.மாவட்ட மட்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்கான விசேட கூட்டம் ஒன்று இன்று மு.ப.10.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்வாண்டில் நடாத்தப்பட்ட மெயவல்லுநர் போட்டி நிகழ்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகள் அனைவரையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி ஆர்.றொகான் ராஜசிங்கம் கேட்டுள்ளார்.

மேற்படி கூட்டத்தில் இவ்வாண்டுக்கான மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள், வீர, வீராங்கனைகளுக்கான பயிற்சி முறைமைகள் ஆகியன பற்றி கலந்துரையாடப்படவுள்ளது.

பிரதேச செயலகங்களின் விளையாட்டு உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் இதில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(உ-110,68)

## இலவச வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 78ஆவது பிறந்த தினத்தையொட்டி நாவலர் வீதியிலுள்ள பகவான் மருந்தகம் 'பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா அஷ்டோத்தரசத நாமாவளி' என்னும் நூலினை இலவசமாக வெளியிட்டுள்ளது (10)

# இன்று ஒரு தகவல்

## ஆளுமைக் கோளாறுகள்

ஒருவன் எப்படி நடந்துகொள்ளுகின்றான் என்பதை வைத்துத்தான் அந்த ஆள் எப்படி என்பதை நாம் முடிவு செயகின்றோம். ஆளுமை என்று சொல்கிறோமே அதற்கு சூழ்நிலைகளை ஆள்கின்ற தன்மை என்று விளக்கம் கொடுக்கின்றார் ஒரு உளவியல் நிபுணர்.

சரி.ஒரு மனிதனுடைய ஆளுமையை உருவாக்கும் விடயங்கள் எவை? பிறப்பு,வளர்க்கப்படும் விதம், படிப்பு, நண்பர்கள், சமுதாயம் என நிறைய உண்டு. ஆளுமையின் அடிப்படையில் சில மனநோய்கள் உண்டாகின்றன. அவைகளைப் பற்றித் தெரிந்து கொண்டோமானால் நம்முடன் இருப்பவர்களை அடையாளம் கண்டு கொள்ள அது உதவியாக இருக்கும்.

பரனாய்டு ஆளுமை என்று ஒன்று. இந்தக் கோளாறு உள்ளவர்கள் எப்படி இருப்பார்கள் தெரியுமா? அதிக உணர்ச்சி, சந்தேகம், பொறாமை போன்றன அதிகம் இருக்கும். வளைந்து கொடுக்க மாட்டார்கள். அடுத்தவர்களோடு இணககமான உறவு இருக்காது. அவர்கள் செய்யும் தவறுகளுக்கு அடுத்தவர்களைக் குறை கூறிக்கொண்டிருப்பார்கள்.இது ஒரு ரகம்.

அடுத்தது ஸ்கிசாய்டு ஆளுமை. இந்தக் கோளாறு உள்ளவர்கள் அடுத்தவர்களுடன் பழகக் கூச்சப்படுவார்கள்.சிறு வயது முதலே இது ஆரம்பமாகிவிடும். பகல் கனவில் சஞ்சரிப்பார்கள். அவர்களது விரோதம், கோபம் போன்றவற்றைக் கூட வெளியே காட்டமுடியாது இருப்பார்கள். பிரச்சினையிலிருந்து ஒதுங்கி எதிலும் ஈடுபாடு இல்லாதவர்களாக இருப்பார்கள்.

அடுத்து சைக்லோ தைமிக் ஆளுமை. உணர்ச்சிகளில் ஏற்றத்தாழ்வு அதிகமாக இருக்கும். சில சமயங்களில் சோகமாக இருப்பார்கள். அந்த சமயத்திற்கேற்றாற் போல் சமூக நிகழ்வுகளில் பங்கெடுத்துக்கொள்வார்கள்.

இன்னொரு வகை எண்ணப்பீடிகை ஆளுமை. இவர்களுக்கு எல்லாம் சரியாக இருக்க வேண்டும். சட்ட திட்டம் எதிலும் ஒரு ஒழுங்கு முறை இப்படி எதிர்பார்க்கும் மனோபாவம் இவர்களது எதிர்பார்ப்புக்கும் வரைமுறைகளுக்கும் மற்றவர்கள் கட்டுப்படவேண்டும் என்று நினைப்பார்கள். இந்த நிலை நீடித்தால் என்ன ஆகும் தெரியுமா? அலைக்கழிக்கும் எண்ணங்கள்,திரும்பத்திரும்ப ஒரே செயலை செய்யத் தூண்டும். மனத்தளர்ச்சிக்கு ஆளாகிவிடுவார்கள்.

அடுத்தது ஹிஸ்டீரியா ஆளுமை. சிறு விஷயங்களை பெரிது படுத்தி நாடகமாடும் நடிகர்கள். இவர்கள் உணர்ச்சி அதிகம் உள்ளவர்கள். இவர்களது மன எழுச்சியால் பக்குவமின்மை, குழந்தைத்தனம், முதிர்ச்சியின்மை எல்லாம் இருக்கும் தன்னலமிக்க குணம் பிறர் தன்னை மட்டுமே கவனிக்கவேண்டும் என்று நினைத்துச் செயற்படுவார்கள்.

அடுத்த ரகம் வளர்ச்சி அற்ற ஆளுமை. அடுத்தவர்களுடன் இணங்கிப்போக முடியாதவர்கள். அறிவு மன வெழுச்சி, சமூக உறவு இவற்றில் போதுமான வளர்ச்சியையும், நிறைவையும் பெற முடியாதவர்கள். இவர்களால் வாழ்வில் முன்னேற முடியாது. பிச்சைக்காரர்கள், குற்றவாளிகள் போன்றோரிடம் இது போன்ற ஆளுமை அதிகமாக

# நாட்டை விட்டு வெளியேறியதான செய்தியை மறுக்கிறார் எஸ்.பி.

(கொழும்பு)

தனது குடும்பத்துடன் இலங்கையை விட்டு வெளியேறி யுள்ள



தாக கொழும்புப் பத்திரிகைகளில் வெள! வந்த செய்திகளில் எது வித உண்மையுமில்லை என்று அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா மறுத்துள்ளார்.

அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா இலங்கையை விட்டு குடும்பத்துடன் வெளியேறிவிட்டார் என்ற செய்தி பரபரப்பாகப் பேசப்படுவது தொடர்பாக கருத்துவெளியிடும் போதே, தற போது இத்தாலியில் இருக்கும் அமைச்சர் எஸ்பி. திஸநாயக்கா மேற்படி மறுப்பை வெளியிட்டுள்ளார்.

அந்த மறுப்பில் அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

எனது அமைச்சின் செயலாளருடனும், மேலதிக செயலாளருடனும் உணவு விவசாய மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ரோமிற்கு சென்றுள்ளேன். இலங்கையின் சார்பில் பாரிய அறிக்கை ஒன்றை அங்கு சமர்ப்பித்துள்ளேன். இம்மாநாடு இன்றுடன் முடிகிறது. மாநாடு முடிந்த கையோடு நான் இலங்கை திரும்பவுள்ளேன் என்று அமைச்சர் எஸ்பி. திஸநாயக்கா தெரிவித்தார். (ம)

# நெல்லியடியில் டெங்கு நுளம்பு குடம்பிகள் அழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நெல்லியடிப்பகுதியில் ஆட்கொல்லி நோயான டெங்குவைப் பரப்பும் எயிடிஸ் இயிப்ரை இன நுளம்புகளின் குடம்பிகள் இனம்காணப்பட்டதையடுத்து அவற்றை அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த மாதம் 36 இடங்களில் இக்குடம்பிகள் கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இதேவேளை, அப்பகுதி பொது மக்களுக்கு டெங்கு ஒழிப்புப்பற்றிய தெளிவான விளக்கத்தை அப்பகுதிப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் வழங்கி வருகின்றார். (உ)

# எமது உரிமைகளைத் தரும் நிலையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் இல்லை

## கௌசல்யன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் அனைவரும், தமது சுய நிர்ணய உரிமையை வென்றெடுக்க நமது தேசியத்தலைவரின் கரங்களை பலப்படுத்த உறுதி பூண வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில்,ஸ்ரீலங்கா அரசும் பேரினவாதிகளும் தமிழ் மக்களின் உரிமைகளை தரமாட்டார்கள் என்பதை அவர்களின் அண்மைய செயற்பாடுகள் மீண்டும் நிரூபணமாக்கியுள்ளன.

புதுக்குடியிருப்பு கண்ணகியம்மன் ஆலய முன்றலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கரும்புலி மேஜர் ரங்கனின் எட்டாம் ஆண்டு நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டு-அம்பாறை மாவடட அரசியல் பொறுப்பாளர் இ.கௌசல்யன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாம் இன்று சுதந்திரக்காற்றை சுவாசிக்கும் நிலை ஏற்படவும் சர்வதேச ரீதியாக எமது உரிமைப் போர் வலுப்பெற்று நிற்பதற்கும் மாவீரர்களே காரணகர்த்தாக்களாவர்.

அவர்களின் தியாகம் மக்கள் மனதில் வரலாற்றுப் பதிவாக உருப்பெற வேண்டும் இவர்களை ஏற்றிப் போற்றுவது தமிழ் மக்களாகிய ஒவ்வொருவரதும் கடமையுமாகும் என்றார்.

இங்கு உரையாற்றிய மட்டு-அம்பாறை மாவட்ட தளபதி ராம்,

எமது தேசியத்தலைவர் இன்று நடத்துகின்ற இராஜதநதிர ரீதியிலான அரசியல் போராட்டத்திற்கு நாமனைவரும் பங்களிக்கவேண்டும் என்று வேண்டுகோள்விடுத்தார். (உ)

## இராசி பலன்

**07.12. 2003**

**(கார்த்திகை 21, ஞாயிறு)**

**சதுர்த்தசி ந.இ.12.12 வரை**

**கார்த்திகை பி.இ.1.54 வரை**

**இராகுகாலம் 4.47-6.17**

**சுபநேரம் 9.17-10.47**

**மேடம்**

அதிக செலவு, வீண்வார்த்தை, மாதர் நட்பு, பிரயாண பயம்.

**இடபம்**

நல்ல முயற்சி, தேகநலன், சயன சுகம், கற்பனை மிகுதி.

**மிதுனம்**

காரிய அலைச்சல், தொழில் கஷ்டம், சுப செலவு, உறவினர் மனஸ்தாபம்.

# 30 ஆயிரம் சவுக்கம் கன்றுகள் இவ்வருடம் நாட்டப்பட்டன

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு வளம்பேணும சங்கம் இவ்வருடம் 30 ஆயிரம் சவுக்கங்கன்றுகளை மணற்காடு குடத்தனைப் பகுதிகளில் நாட்டியுள்ளது.

இதேவேளை,சென்றவருடம் 15 ஆயிரம் சவுக்கங்கன்றுகள் மாத்திரமே நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதைவிட தலா 2ஆயிரம் சவுக்கங்கன்றுகள் வடமராட்சி வடக்கு மீனவர் சங்கங்களின் சமாசத்திற்கும். வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன. (உ-35)

# காட்டெருமைகள், யானைகள்

களுடன் இணங்கிப்போக முடியாதவர்கள். ... வெழுச்சி, சமூக உறவு இவற்றில் போதுமான வளர்ச்சியையும், நிறைவையும் பெற முடியாதவர்கள். இவர்களால் வாழ்வில் முன்னேற முடியாது. பிச்சைக்காரர்கள், குற்றவாளிகள் போன்றோரிடம் இது போன்ற ஆளுமை அதிகமாக இருக்குமாம்.

அடுத்தது சோர்வுடைய ஆளுமை. எதிலும் உற்சாகம் இல்லாமல் சோர்ந்து போய் ''அதற்கு நமக்கு வலிமை இல்லை'' என்றுகூறுவார்கள். சிறு விடயங்களுக்கு அதிர்ச்சி அடைவார்கள். வாழ்வின் சுவையை அனுபவிக்கமுடியாதவர்கள்.

இன்னொரு ரகம் கொதித்தெழும் ஆளுமை. எதற்கெடுத்தாலும் ஆத்திரம், குரோதம்,வன்செயல் இவற்றில் ஈடுபாடு உள்ளவர்கள். நத்தை வகை ஆளுமை என ஒன்று அடுத்தவர்கள்மீது விரோதம் இருக்கும். அடிக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கும். ஆனால் அதை அப்படியே வெளிக்காட்டாமல் அதே சமயம் அமைதியான முறையில் வெறுப்பை வெளிக்காட்டும் ரகம். இவர்கள் பேசாமல் இருந்துகொண்டே நினைத்ததைச் சாதிப்பார்கள். முன் ஜாக்கிரதை ஆளுமை ஒரு ரகம் பாதுகாப்பின்மை, சந்தேகம், முழுமையின்மை, அரைவேக்காட்டுத்தனம் இப்படியான மனப்போக்கு அதிகமாக இருப்பதனால் அகம்பாவம், பிடிவாதம், எச்சரிக்கை யாவும் அளவுக்கு மீறியிருக்கும்.

இதுவரை நாம் பேசிக்கொண்டிருந்த ஆளுமைப்பண்புகள் அதிகமாகி விட்டால் ஆளுமைக்கோளாறுகள் ஏற்படும். அதனடிப்படையில் மன வியாதிகள் ஏற்படும்.

ஒருவர் ஒரு மனோதத்துவ டாக்டரைத்தேடி வந்தார். ''டாக்டர் எனக்கு மனதில் ஏதோ வியாதி ஆளுமைக் கோளாறு. அதாவது எனக்கு விரைவில் இறந்து விட்டால் நல்லது எனத்தோன்றுகின்றது'' என்றார். உடனே அந்த டாக்டர ''சரி... அப்படி என்றால் இங்கேயே இருங்கள் நான் வைத்தியம் செய்கின்றேன்''என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

**மிதுனம்**
காரிய அலைச்சல், தொழில் கஷ்டம், சுப செலவு, உறவினர் மனஸ்தாபம்.

**கடகம்**
இஷ்ட சித்தி,களஸ்திர நன்மை, தெய்வ சிந்தை, பெருமையடைதல.

**சிங்கம்**
தொழில் நன்மை, நல்லசெய்தி, அதிகாரம், உற்சாகம்.

**கன்னி**
சத்துருஜெயம், பிரயாணம், சரீரப் பிரயாசை, வீண்பயம்.

**துலாம்**
வாகனபயம், மனக்கிலேசம், தர்மம் செய்தல், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
தேக ஆரோக்கியம், நல்ல வரவேற்பு, நல்ல வருமானம், காரிய சிந்தை.

**தனுசு**
பகைவர் நேசம், தெளிந்த சிந்தை, உடல் நலம், போசன சுகம்.

**மகரம்**
முயற்சி தாமதம், சோம்பல் நிலை, சிறு வியாதி, நல்ல மனைவாசம்.

**கும்பம்**
மனப்பயம், அதிக பிரயாசை, பெரியோர் ஆதரவு, முயற்சி தாமதம்.

**மீனம்**
சகோதரர் உதவி, பிரயாண நன்மை, புதிய பொருள் சேர்க்கை, போசன சுகம்.

(பழையநேர்யடிகணிப்பிடப்பட்டது)

- வளவன்.

இதேவேளை,சென்றவருடம் 15 ஆயிரம் சவுக்கங்கன்றுகள் மாத்திரமே நாட்டப்பட்டமை குறிப்பிடத் ... கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன.

(உ-35)

# காட்டெருமைகள், யானைகள் வயல்களில் புகுந்து அட்டகாசம்

(மருதங்கேணி)

முள்ளியவளை கமநல அபிவிருத்திச் சேவை நிலையத்திற்கு உட்பட்ட செய்கை நிலங்கள் கட்டாக்காலி எருமைமாடுகளாலும், காட்டு யானைகளாலும் அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தகாலப் பகுதிகளில் இராணுவத்தின் எறிகணைகள் இப்பகுதிக் காடுகளில் வீழ்ந்து வெடித்ததால் அக்காலத்தில் யானைத்தொல்லை குறைவாகவே இருந்தது.

ஆனால், தற்போதுசுமார் பத்து, பதினைந்து யானைகள் கூட்டமாக வயல் வெளிகளுக்குள் புகுந்து நெற்பயிர்களை அழித்து வருவதுடன், கட்டாக்காலியாகத் திரியும் வளர்ப்பு எருமைமாடுகளும் பட்டி பட்டியாகப் பகல் இரவு என்றில்லாமல் வயல்களில் புகுந்து நாசம் செய்துவருகின்றன.

இதேவேளை, வயலில் புகுந்தது எருமைமாடுகள் என எண்ணித் துரத்திச் சென்றால் துரத்திச் சென்ற வரை யானைகள் துரத்திய சம்பவமும் நிகழ்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

(உ-35)

# இந்தியா சென்ற அமைச்சர் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம்கள் குழு நாடு திரும்பியது

(கொழும்பு)

இந்திய அரசின் அழைப்பை ஏற்று அந்நாட்டின் நடைமுறையில் உள்ள அதிகாரப்பரவலாக்கல் குறித்து ஆராயும் பொருட்டு இந்தியா சென்றிருந்த கப்பல்துறை மறறும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினர் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

கடந்த 28ஆம்திகதி இந்தியா சென்றிருந்த இக்குழுவினர் இந்திய வெளியுறவு அமைச்சர் யஸ்வந் சிங்கா, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி, இந்தியக் கப்பல் போக்குவரத்து அமைச்சர் உட்பட அந்நாட்டின் முக்கிய பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததுடன், இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமை குறித்தும் அவர்களுக்கு விளக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ 61.10)

மையல் ஒருவன் களித்தற்றால் பேதை தன்
கை யென்று உடைமை பெறின் – குறள்

# வலம்புரி

## ஜனாதிபதியின் மாற்றுவழி என்ன?

தன்னால் முன்வைக்கப்பட்ட தேசிய நல்லிணக்க அரசு சாத்தியப்படாது போனால் மாற்று வழியை கையாளப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எச்சரிக்கை செய்துள்ளார்.

தேசிய நல்லிணக்க அரசை அமைக்க முடியாது போனால், மாற்று வழியைக் கையாளப்போவதாக அறிவித்துள்ள ஜனாதிபதி தனது மாற்றுவழி என்ன என்பதை தெரிவிக்கவில்லை.

இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய அதியுச்ச அதிகாரம் பொதுத் தேர்தல் நடந்து ஒருவருட கால முடிவில் ஏதாவது ஒரு காரணத்தை முன்வைப்பதன் மூலம் பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவதாகும்.

இவ்வதிகாரம் ஜனாதிபதியிடம் இருக்கும்வரை பாராளுமன்ற ஜனநாயகம் சிறைகளுள் இருக்கும் [illegible]தியின் நிலையாகவே இருக்கும்.

அவ்வாறாயின் ஜனாதிபதி முறை ஒரு சர்வாதிகார முறையா என்ற கேள்வி எழவே செய்யும். இக்கேள்விக்குப் பதில் தேடினால் 'ஜனநாயகத்தை நசுக்கும் ஜனநாயகம்' என்று கூறும் அளவிலேயே இலங்கையில் ஜனாதிபதி ஆட்சி முறை அமைந்துள்ளது.

ஓர் ஜனநாயகத்தை இன்னோர் ஜனநாயகம் அடக்கி ஆளுமாயின் அதுகூட சர்வாதிகாரம் என்ற வகுதிக்குள்ளேயே அடக்கப்படவேண்டும். இவை மேன்மை தங்கிய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் நரி மூளையின் உதித்த நாசகாரம் என்று மனம் நொந்து கொண்டாலும் ஜே.ஆர்.ஜயவர்த்தனா தனது இனத்துக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய வகையில் அரசியல் யாப்பினை தயாரித்தார் எனில் அதுவுமன்று. ஆக, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைமையை எடுத்துவிடக்கூடாதென்பதற்காகவும் ஜனாதிபதி என்ற சர்வாதிகாரப் பதவியை தோற்றுவிப்பதன்மூலம் அதனை ஆளும் சிங்கள வர்க்கத்திற்கு உரியதாக்கி, அதன் மூலம் தேவை ஏற்படும் போதெல்லாம் தமிழ்மக்களை நசுக்கவும் அவர்களின் பாராளுமன்ற உரிமையை அர்த்தமற்றதாக மாற்றுவதற்காகவுமே ஜே.ஆர் 1978 இல் புதிய அரசியல் யாப்பினை அறிமுகப்படுத்தினார். அவரின் அரசியல் படைப்பு இப்பொழுது வேலைசெய்யத் தொடங்கியுள்ளது. தமிழர்களை நசுக்குவதற்காக அதியுத்தமர் தயாரித்த யாப்பு முழு இலங்கைக்குமே ஆபத்தாகி விட்டது.


இதன் ஒரு கட்டமாகவே தேசிய நல்லிணக்க அரசை அமைப்பது சாத்தியமற்றுப் போகுமாயின் மாற்று நடவடிக்கை எடுப்பேன் என்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் எச்சரிக்கையாகும்.

இவ்வெச்சரிக்கையை ஆய்வு செய்தால் அது பாராளுமன்றக் கலைப்பு என்றே அர்த்தம் கொள்ள வேண்டியதாக இருக்கும்.

# ஏனையோருக்கு நன்மை தருவனவாக

# எமது தனித்துவங்கள் அமைய வேண்டும்

''மனிதருடைய நடத்தையெல்லாம் அவர் பார்வையில் குற்றமற்றதாய்த் தோன்றலாம். ஆனால் ஆண்டவர் அவர் உள்ளெண்ணத்தைச் சீர்தூக்கிப் பார்க்கிறார்.'' (நீதி.மொ 21:2)



அறிவில் - அந்தஸ்தில் உயர்ந்திருந்தாலும், தன்னைத்தானே ஆட்சிபுரியத் தெரியாதவன் மனிதத் தன்மையை இழந்து மற்றவரை ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றான்.

எப்போதும் ஒரு மனிதன் தன்னைத்தானே மீட்டுப் பார்க்கவேண்டும். தனது நடத்தைக் கோலங்கள் ஏன் இவ்வாறு இருக்கின்றது? இதனால் பிறருக்கு ஏற்படும் பாதிப்பு என்ன? எனது நல்ல பக்கங்கள் என்ன?, எனது மறையான பக்கங்கள் என்ன? என்று ஒரு கனம் எம்மை நாமே அலசி அராய வேண்டும்.

இன்று எமது சமூகப் புலத்தில் நடைபெறுகின்ற அத்தனை தீமைகளும் நியாயப் படுத்தப்படுகின்றது. ஏன் எமது வாழ்வில் கூட, எமது தவறை ஏற்றுக் கொண்டு அதனைத் திருத்தி வாழமுற்படுவது மிக அரிதாகவே இருக்கின்றது. தவறை ஏற்று அதனை திருத்திக் கொள்ள தவறுவோர், தம்மை தாமே மீட்டுப் பார்க்க தவறியவர்களே.

தம்மிடம் இருக்கும் மறையான நடத்தைக் கோலத்தை பெருமிதத்துடன் கூறி, அதனை செய்கின்றவர்கள் எம்மை சூழ இருக்கின்றார்கள். ஆனால் அவர்களின் நடத்தையினால் பிறருக்கு ஏற்படும் தீமைகளை அவர்கள் ஒருபோதும் உணர்வதில்லை. உணர்ந்தாலும் மரத்துப் போனவர்களாக இருக்கின்றார்கள்.

சிலர் தமது நடத்தைக்கு ஏற்றது போல மற்றவர்கள் இசைந்து வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அவ்வாறு இசைந்து வர மறுப்பவர்களுடன் முரண்பாடுகளை

## பரமபிதா காட்டிய பாதை

ஏற்படுத்தி வாழ்க்கையை அவல நிலைக்கு மாற்றுகின்றார்கள்.

குடும்ப - சமூக - சமய நிறுவனங்களில், இத்தகைய தனிமனித சிந்தனைப் போக்கு அதிகரித்து இருப்பதினாலேயே, பிரச்சினைகள் வளர்ந்து இந்நிறுவனங்கள் சிதைந்து போகின்றன.

ஒருவருடன் எமக்கு முரண்பாடு என்றால் அதற்கு காரணம் என்ன? என்று பார்க்கவேண்டும், இந்த முரண்பாட்டுக்கு எனது நடத்தைக் கோலங்கள் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்தியது என்று மீட்டுப் பார்த்து, அதில் இருந்து திருந்தி வாழ முயற்சிக்க வேண்டும். மன்னிப்பு கேட்கத் தயராக வேண்டும். அப்போதே நட்புறவு வளர உறுதுணையாகும். இவ்வாறு ஒவ்வொரு தனிமனிதனும் தன்னைத் தானே மீட்டுப் பார்த்து மனச்சலவை செய்ய வேண்டும்.

எமது அடிப்படை மனப்பான்மையில் மாற்றம் காணும் வரை முரண்பாடற்ற சூழலை உருவாக்க முடியாது. எமக்கு என்று தனித்துவங்கள் இருக்கத்தான் வேண்டும். ஆனால் அந்த தனித்துவங்கள் மறையானதாக அமைந்து, மற்றவரை பாதிப்புக்குட்படுத்துவதாக ஒருபோதும் இருக்கக் கூடாது. அவை நேரான தனித்துவங்களாக எமக்கும் - மற்றவர்களுக்கும் பயன் படத்தக்கதாக இருக்க வேண்டும்.□

**யாழ். ராதவல்லி**

## பால் கொள்வனவு விற்பனை நிலையம்

(பருத்தித்துறை)

கரவெட்டிப்'பிரதேச பால் உற்பத்தியாளர்கள், பால் பாவனையாளர்களின் நன்மை கருதி கரவெட்டியில் பால் கொள்வனவு, பால் விற்பனவு நிலையம் ஒன்று திறந்து வைக்கப் படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எம்.சறோஜினிதேவி மேற்கொண்டுள்ளார்.

கரவெட்டி நாவலர் மடத்தில் அமையவுள்ள இந் நிலையம் அடுத்த மாத நடுப்பகுதியில் திறந்துவைக்கப் படவுள்ளது. (உ-52)

# இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி

# நுழைந்து நாம் மீன் பிடிக்கவில்லை

## இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் மறுப்பு

(லண்டன்)

இந்திய மீனவர்கள் நீண்டகாலமாக மீன்பிடித்துக் கொண்டிருந்த பகுதிகளில் மீன் பிடிப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் தலையிட்டு இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அப்போது தான் கடலில் இடம்பெறும் அத்து மீறல்களுக்கு தீர்வுகாண முடியும் என இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் தேவராஜன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இந்திய மீனவர்களில் 52 பேரை நேற்றைய தினம் விடுவித்தமை தொடர்பாக பி.பி.சியின் தமிலோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்

இது குறித்து மேலும், கருத்து வெளியிட்ட தேவராஜன்,

இலங்கை மீனவர்களைப் பொறுத்தவரை எம்மீது அவர்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு யாதெனில், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் ட்ரோலர்கள் மூலம் மீன் பிடித்து வருகின்றனர் என்பதாகும்.

ஆனால், நாம் இப்போது மட்டும் அப்படிப் பிடிக்கவில்லை. நாம் தொன்று தொட்டு பலநூற்றாண்டு காலமாக அங்கேதான் மீன்பிடித்துக் கொண்டு வந்தோம்.

கடந்த 1974 இல் கச்சதீவுக்கு அன்னை இந்திராகாந்தி சென்ற போதுகூட இருநாட்டு மீனவர்களும் அங்கு மீன் பிடித்தக்கொள்ளலாம் என்று கூறப்பட்டது.

அதை வைத்துத்தான் நாம் அங்கு மீன் பிடிக்கின்றோமே தவிர மீனைக் கொள்ளையடிக்க வேண்டும் என்ற எண்ணம் எமக்கில்லை.

நமது பகுதியிலிருந்து 12 கிலோ மிற்றர்தான் இந்தியாவின் எல்லை. அதில் 3 கடல் மைல்களை எம் நாட்டுப் படகுகளுக்கென விடவேண்டும் என்பது இந்தியச் சட்டம். மீதமுள்ள 9 கிலோ மீற்றர் பாறைகளாகக் காணப்படுகின்றன. ஆகவே நாம் மீன்பிடிப்பதற்காக கிழக்கு, பக்கமாகத்தான் போக வேண்டும்.

தமிழக முதல்வர் கச்சதீவுப் பகுதியை குத்தகைக்கு எடுத்துத் தருவதாக இந்தியப் பிரதமருக்கு தகவல் அனுப்பியுள்ளார். இது மிகவும் சாலச் சிறந்த[illegible] அப்படி முடியாவிட்டாலும் கூட 1974 ஆம் ஆண்டு கச்சதீவு ஒப்பந்தத்தில் என்ன வரையறுக்கப்பட்டுள்ளதோ அதன்படி இரு பகுதியினரும் நடக்க வேண்டும் என்றார். (உ-62,8)

# பஸ் கட்டணங்களை அதிகரிக்க முடியாது

(கொழும்பு)

தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனம் தாம் நினைத்த மாதிரி பஸ் கட்டணங்களை அதிகரிக்க முடியாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் கே.சி. கலகுலே தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலைகள் அதிகாக்கும் போது பஸ் உரிமையாளர்களும் தாம் நினைத்த மாதிரி கட்டணங்களை அதிகரித்து வருகின்றார்கள்.

உண்மையிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட போக்குவரத்து ஆணைக்குழுவின் நடைமுறைகளின்படி ஒரு வருட காலத்தின் பின்னரே பஸ் கட்டணங்களை அதிகரிக்க முடியும்.

இதன்படி அடுத்த ஆண்டு ஜுலை மாதத்திற்கு முன்னர் பஸ் கட்டணங்களில் எதுவித மாற்றத்தையும் செய்ய முடியாது.

அத்துடன், பஸ் கட்டணங்களை அதிகரிக்கும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை கணக்கில் எடுக்க முடியாது என்றும் அவர் மேலும தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருட்களின் விலை உயர்வு காரணமாக தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனம் பஸ்கட்டணங்களை அதிகரிக்கப் போவதாக அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-60,10)

## கட்டாக்காலிகள் தொல்லை

காரைநகர், மூளாய், பொன்னாலை, தொல்புரம் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு வேளைகளில் வயல் நிலங்களுககுள் உட்புகும் கட்டாக்காலி மாடுகள் பயிர்களை நாசம் செய்து வருகின்றதாக விவசாயிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (உ-49)

## திசைரி தியானம்

### முதல் படி

ஆன்மீகத்தில் முதல்படியாக இருப்பது மனதைக் கட்டுப்படுத்துவதாகும். மனத்தை வெல்லுவது என்பது உலகத்தை வெல்லுவதாகும். மனத்தை ஜெயித்தலே மிகப் பெரிய வெற்றியாகும். பொருள்களுக்கான ஆசைகளின் மூலமாக மனமானது வலிமையற்றும் ஓய்வற்றும் போய்விடுகிறது. மனமானது ஆத்மனிலே மையப்படுத்தப்படாவிடில், மனிதன் பொருள்களுக்காக ஆசைப்படுகிறான். ஆசையற்றவனாக இரு. மனத்தைக்கட்டுப்படுத்து என்றென்றும் சந்தோசமாக இரு.

சுவாமி சிவானந்தர்

# அதிகாரப் பரவலாக்கல் நாட்டைப் பிளவு படுத்தும்

## எச்சரிக்கிறார் தம்பாற அமிலதேரர்

(கொழும்பு)

நாடுபிளவுபடாதவகையில் அதிகாரப்பரவலாக்கலை உருவாக்குதல் பற்றி அரசியல் தலைவர்கள் பேசும் போது, அதிகாரப்பரவலாக்கல் நாட்டைப் பிளவுபடுத்தக்கூடியது என்பது தானாகவே புலப்படுகிறது.

இவ்வாறு தேசிய பிக்குமார் முன்னணித் தலைவர் வண.தம்பாற அமிலதேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும், ஏனைய புலி உறுப்பினர்களும் வேறுயாருமல்லர் காலனித்துவ ஆதிக்கர்களின் கைப்பொம்மைகள். அவர்கள் தமிழர்களின் பிரதிநிதிகள் அல்லர்.

கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் ஆரம்பமான எதிர்ப்பு ஊர்வத்தில் பேசும் போதே அவர் இவ் வாறு கூறினார். ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான பிக்குகள் கலந்து கொணடனர். இ[illegible] ஆர்ப்பாட்ட பேரணியின் முக்கி[illegible] நோக்கம் புலிகளின் கோரிக்கைகளை உடனடியாக நிராகரிக்குமாறு அரசிற்கு அழுத்தம் கொடுப்பதுடன். மக்களுக்குத் தற்போதைய நிலைவரத்தை விளக்குவதும் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-6)

# பிரபாவின் மாவீரர்தின உரையை ரூபவாஹினி ஒளிபரப்பவில்லை

## மக்கள் தொடர்பாடல் அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின உரையை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் கடந்த நவம்பர் 27 அன்று நேரடியாகவோ அல்லது வேறுவிதமாகவோ வெளியிடவில்லை என மக்கள் தொடர்பாடல் அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில், ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை குறை கூறும் நோக்கோடு ஊடகத்தின் ஒருபிரிவினர் தவறான வகையில் உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்பிவருவது வருத்தத்திற்குரியது. கடந்த 27ம் திகதி பிரபாகரனின் உரையை ஒளிபரப்பியதாக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தைப் பல ஊடகங்கள் விமர்சித்தன.

இச்செய்தி தவறானது, இவ்வுரையைப் பரிசிலுள்ள புலிகளின் ஐ.ரி.என் எனும் ஒளிபரப்பு நிலையத்தினூடாக ஒளிபரப்புவதற்கு இலங்கை ரெலிகொம் சகல வசதிகளையும் செய்திருந்தது. ஆனால் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் இவ்வுரையை நேரடியாகவோ, அல்லது வேறு விதமாகவோ ஒளிபரப்பவில்லை.

இதேவேளை, கடந்த 2002ல் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனமும் புலிகளின் உரையை ஒளிபரப்புவதற்கு சகல வசதிகளையும் செய்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது, மேற்படி உரையை ஒளிபரப்பவில்லை என நாம் மீண்டும் மீண்டும் கூறுகிறோம். ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் இவ்வுரையின் எந்தப்பகுதியையும் தமது எந்த வலையமைப்பினூடாகவும் ஒளிபரப்பவில்லை என்பது மட்டுமன்றி, இவ்வுரையை ஒளிபரப்ப எந்த விதத்திலும் உதவவில்லை. ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு களங்கம் கற்பிக்கும் நோக்குடன் ஊடகத்துறையின் சில பிரிவினர் தவறாகச் செய்தி பரப்பியமைய வருத்தத்திற்குரியது என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (த-6)

---

### எமது கட்சி...

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்திற்குள் சென்ற பிரஸ்தாப நபர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இதுபற்றி மனிதவுரிமை ஆணைக்குழு உட்பட பலரிடமும் நவம்பர் 11ம் திகதி முறையீடு செய்துள்ளோம்.

எனினும் இதுபற்றி பொறுப்பு வாய்ந்தவர்கள் அக்கறை செலுத்தவில்லை. இந்தப் பின்னணியிலேயே விடுதலைப் புலிகள் நேற்றைய செய்தியாளர் மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### ஈ.பி.டி.பி...

பின்னர் தினமுரசுப் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டேன். இதன் போது மக்கள் மத்தியில் இருந்து கடுமையான எதிர்ப்புக் கிளம்பியதையடுத்து ஈ.பி.டி.பி அமைப்பில் இருப்பது ஆபத்தென உணர்ந்து கடந்த மாதம் 7ம் திகதி அவ் அமைப்பிலிருந்து தப்பி ஓடி உறவினர்களின் வீட்டில் ஒரு மாதம் வரையில் தலைமறைவாக தங்கி இருந்தேன்.

கடந்த 4ம் திகதி வியாழன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி முகமாலைச் சோதனைச் சாவடி ஊடாக கிளிநொச்சியில் புலிகளிடம் சரணடைந்தேன் என்றார். (த)

### எனது அனுமதி...

நடைபெறவுள்ளதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகள் மூலம் அறிந்து கொண்டேன்.

இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்பு விதிகளின்படி கட்சிகள் அனைத்து நடைமுறைகளையும் தலைவரின் ஆலோசனையுடன் வழிநடத்துவது கட்சிச் செயலாளர் நாயகத்தின் பொறுப்பாகும். இந் நடைமுறையே கட்சியின் ஆரம்பகால நடைமுறையாகும். எனவே இவ்வாறான கூட்டம் ஒன்றைக் கூட்டுவதும், அதனை நடத்துவதும் முறைகேடானதும் அமைப்பு விதிகளுக்கு விரோதமானதும் என்றும் ஆனந்த சங்கரி அக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ம)

# மாலைதீவிலுள்ள 16 கைதிகளும் விரைவில் விடுதலையாவர்

(கொழும்பு)

மாலைதீவில் சிறையிலுள்ள 16 இலங்கையர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூமின் விசேட உத்தரவின் பேரிலேயே இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. அவர்கள் விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

கடந்த நவம்பர் 11ல் மாலைதீவுக்குச் சென்று மாலைதீவு வெளியுறவு அமைச்சர் பாதுல்லா ஜமீலை வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ சந்தித்துக் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே சிறையிலுள்ள இலங்கையர்கள் விடுவிக்கப்படவுள்ளனர்.

மாலைதீவிலுள்ள இலங்கைத் தூதரகம் கைதிகளை இலங்கைக்கு அனுப்பும் ஏற்பாடுகளை செய்துள்ளது. அத்துடன் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய கைதிகளின் விசாரணைகளைத் துரிதப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கும் என தெரிவிக்கப் படுகிறது. (த-6)

# புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் இன்று திருமலையில் சந்திப்பு

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் மக்களின் பிரதிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று திருகோணமலை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் தலைமை தாங்கவுள்ளார்.

இச்சந்திப்பு தொடர்பாக திருகோணமலை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் தகவல் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாக இன்றைய சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்தார். (ம)

---

### சமாதான முயற்சி...

ஏற்பட்டுள்ளதுடன் பொருளாதார அபிவிருத்தியிலும் பெரும் தடை ஏற்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்கி யிருப்பதால் அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவுள்ளது என்றும் தெரிவித்தார். (ம)


**YOGI HOME SCIENCE ACADEMY**

வழங்கும்

**பண்டிகைக்கால மனையியல் செய்முறை**

விளக்க வகுப்புக்கள் 2 நாட்கள் மட்டும்

1. நான்கு கேக் கலவைகள் 13 - 12 - 2003 காலை10 மணிமுதல் 2 மணிவரை
   1) Rich Cake
   2) Dates Cake
   3) Light Fruit Cake
   4) Marble Cake
2. ஐந்து Pudding வகைகள் 13 - 12 - 2003 3 P.M முதல் 5 P.M வரை
   1) Caramal Pudding
   2) Cake Pineapple Pudding
   3) Ribbon Pudding
   4) Biscuit Pudding
   5) Chocolate Icecream
3. ஐந்து வகை Short Eats வகைகள் 14 - 12 - 2003 காலை10.30 மணிமுதல் 1 மணி வரை பின் 2 P.M- 4 P.M வரை
   1) Pizza
   2) Nippon Rolls
   3) Samosa
   4) Date Surprise
   5) Puff Short Eats

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்

T.Phone :- 222 2796

75, அம்மன் வீதி
நல்லூர் யாழ்ப்பாணம்
(வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

(8006)



**MEDICAL CHECK UP**

**வைத்திய பரிசோதனை**

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.






**சங்குநாதம்**

சங்கரியைச் சரிக்கப் படாதபாடு

திருமலையில் தொடரும் தமிழ் — முஸ்லிம் கலவரம்

ஜனாதிபதி — பிரதமர் இணைவு சாத்தியமாகுமா?

இதற்குப் பெயர்தான் வசந்தபுரம்

மற்றும் பல அம்சங்களுடன்

**சங்குநாதம்**

விலை ரூபா 14.00


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.